உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

முப்பத்தெட்டாந்தொகுதி.

**Volume 38.**

விக்கிரம—விஷு ௵

1940—1941.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

# முப்பத்தெட்டாந் தொகுதியுள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| அகநானூற்றில் ஒரு செய்யுள்:— | ஸ்ரீ. G. சுப்பிரமணியபிள்ளை, M.A., B.L. | அகூ |
| இசைக்கிரமம்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் | சுCகி |
| இந்தளூர்த் திருமால்கோயிற் கல்வெட்டு:— | ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையார் | ருளசு |
| இயற்கைநவிற்சியும் செயற்கைப்புனைவும்:— | ஸ்ரீ. சி. கணேசையர் | ௩0ரு |
| இராமசெயம்:— (உத்தரகாதை) | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் | ௩கூரு, சுசுக |
| உயிரைக் காணலாமா?:— | ஸ்ரீ. க. பொ. இரத்தினம் | ௩சுரு |
| எண்ணலளவை:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் | சுள௩ |
| ஐயமும் அழகும்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் | உகூ |
| ஓர் எதிருரை:— | ஸ்ரீ. S. S. பாரதியார், M.A., B.L. | சுஅ௩ |
| ஓர் எதிருரை மறுமொழி:— | திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர் | சுகூகூ |
| கடல்கொண்டதெழுரியா:— | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L. | க |
| கம்பராமாயண சாரம்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. | கரு, ருள, கஉக, கரு௩, உ0க, உள௩, ௩க௩, ௩ரு௩, சுகக, சுசுகூ, ருஉகூ |
| கம்பனும் உவமவலங்காரமும்:— | ஸ்ரீ. சி. கணேசையர் | ௩அ௩ |
| கவியும் சால்பும்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் | கஎஎ |
| சங்கீதமகரந்தம்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் | ௩௩ள |
| தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— | | ௩எரு |
| திருக்கோட்டியூர்த் திருமாமகள்நாச்சியார் கலிவெண்பா:— | ஸ்ரீ. மு. அருணசலம்பிள்ளை, M.A. | ருளஉ |
| திருநாங்கூர்:— | ஸ்ரீ. ச. ஸ்ரீநிவாஸையங்கார். | கசுரு |
| நாசிக்கொடுமையும் நமது கடமையும்:— | T. K. இராமாநுஜையங்கார், உதவிப் பத்திராசிரியர் | ருஉக |
| நாடும் நகரும்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர். | ககூ௩ |
| நிலவும் பொழிலும்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர். | கக௩ |
| பட்டினத்தார்:— | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L. | ௩எஎ |
| பண்டைக்காலத்து நாகரிகம்:— | ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை, B.A. | ௩ரு, அ௩, க௩க, கஅரு |

பரதாழ்வான்வைபவம்:— } திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர் கக உகக, உசடு, உகள

பரிசோதனத்தொடர்:—ஒரு மாணவன் சள

பிழையும் திருத்தமும்:—ஸ்ரீ. சி. கணேசையர் ருளந

மங்களவாழ்த்து:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப் பத்திராசிரியர் ருஉஅ

மதிப்புரை:— உசுக, நசக

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— நகக

மறுமொழியில் வருமரண்கள்:— } ஸ்ரீ. ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L. ருருந

மலையும் கடலும்:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் கசுக

மின்சார வரலாறு:—ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L. எள

முக்கூடற்பள்ளு:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப் பத்திராசிரியர் உநரு, உருள

மெய்ப்பாடு:—ஸ்ரீ. சி. கணேசையர். சருள

வண்ணமும் வடிவும்:—ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர் சக

'வந்தேதிரேதோழதானே' என்ற பாட்டின் பழைய வுரையும் புதியவுரையும்:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். G.B.V.C. ருசுக

ஸரஸ்வதீகண்டாபரணம் (கலைமகள்கழுத்தணி):— } ஸ்ரீ. V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார், B.A., B.L. கசுந, உஉரு, நஅக, சநந, சசுக


---

## அநுபந்தம்.

### விஷயம்.


ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:-(பகுதி-கய.) 1—34

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள். பகுதி—கஉ. பக். 1

மதுரைத்தமிழ்ச்சங்க வரவுசெலவுகணக்கு:— பகுதி—சு, பக். 4


---

### நூல்.

[முற்றுப்பெருதவை.]


குருகைமான்மியக் குறிப்புரை:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் பகுதி—ச, அ, க.

திருமுருகாற்றுப்படை உரையாசிரியருரை:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L. பகுதி—க, உ, ச.

# பொருளுரை வழங்கியோர் பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்

ஸ்ரீ. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L., (No. 3, சித்திரக்குளச்சதுக்கம், மயிலாப்பூர், சென்னை.)

கடல்கொண்டலெமூரியா ... க

மின்சார வரலாறு ... ... எஎ

பட்டினத்தார் ... ... ௬எஎ

ஸ்ரீ. மு. அருணசலம்பிள்ளையவர்கள், M.A., (சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சியாளர்.)

திருக்கோட்டியூர்த் திருமாமகள்நாச்சியார் கலிவெண்பா ... ... ௫எஉ

ஸ்ரீ. க. போ. இரத்தினம் அவர்கள்.

உயிரைக்காணலாமா? ... ... ௬சரு

ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B.A. (ஆசிரியர், ஸ்கந்தர் வரோதய காலேஜ், சுன்னுகம், யாழ்ப்பாணம்.)

பண்டைக்காலத்து நாகரிகம் ௬௫, அ௬, க௬க, கஅ௫

T. K. இராமாநுஜையங்கார், (உதவிப்பத்திராசிரியர், செந்தமிழ்.)

முக்கூடற்பள்ளு ... ... உ௬௫, உ௫எ

இராமசெயம் (உத்தரகாதை) ... ... ௬கூ௫, சசக.

நாசிக்கொடுமையும் நமதுகடமையும் ௫உக

மங்களவாழ்த்து ... ... ௫உஅ

குருகைமான்மியக் குறிப்புரை ... (பகுதி—ச, அ, கூ.)

ஸ்ரீ. சி. கணேசையரவர்கள், (ஆசிரியர், ஸம்ஸ்க்ருதவித்தியாசாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம்.)


இயற்கைநவிற்சியும் செயற்கைப்புனைவும் ௩0௫

கம்பனும் உவமவலங்காரமும் ... ௩அ௩

மெய்ப்பாடு ... ... ச௫எ

பிழையும் திருத்தமும் ... ௫எ௩


ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், (ஆசிரியர், திருவையாறு.)


இந்தளூர்த்திருமால்கோயிற் கல்வெட்டு ௫எச


ஸ்ரீ. G. சுப்பிரமணியபிள்ளையவர்கள், M.A., B.L., (சென்னை.)


அகநானூற்றில் ஒருசெய்யுள் ... அகூ


ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C. (வெள்ளகால் போஸ்டு, பாவூர்ச்சத்திரம்வழி, S. I. Ry., திருநெல்வேலி ஜில்லா.)


கம்பராமாயண சாரம் — க௫, ௫எ, கஉக, க௫௩, உ0க, உஎ௩, ௩க௩, ௩௫௩, சகக, சசகூ, ௫உகூ.

'வந்தெதிரேதொழுதானை' என்ற பாட்டின் பழையவுரையும் புதியவுரையும் ௫சாகூ


திரு. நாராயணையங்கார், (பத்திராசிரியர், செந்தமிழ்.)


பரதாழ்வான் வைபவம் ... கூகூ, உகக, உச௫, உகூஎ.

ஓர் எதிருரைமறுமொழி ... சகூகூ


ஸ்ரீ. S. S. பாரதியாரவர்கள், M.A., B.L., (மலையகம், பசுமலை.)


ஓர் எதிருரை ... ... சஅ௩

மறுமொழியில் வருமுரண்கள் ... ௫௫௩

ஸ்ரீ. V. S. ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள், B.A., B.L, (மதுரை.)

| | |
|---|---|
| ஸரஸ்வதீகண்டாபரணம் (கலைமகள்கழுத்தணி) | கசுரு, உஉ௫, ருஅசு, சருரு, சசுகூ. |

ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள், (பிரபுத்தபாரத பத்திராசிரியர், அத்வைதாசிரமம், Mayavati Post, (Via.) Lohaghat, Almora Dt., U.P., Himalayas.)

| | |
|---|---|
| ஐயமும் அழகும் ... ... | உகூ |
| வண்ணமும் வடிவும் ... ... | சகூ |
| நிலவும் பொழிலும் ... ... | ககரு |
| மலையும் கடலும் ... ... | கசுகூ |
| கவியும் சால்பும் ... ... | கஎஎ |
| நாடும் நகரும் ... ... | ககூரு |
| சங்கீதமகரந்தம் ... ... | ருருஎ |
| இசைக்கிரமம் ... ... | ச0க |
| எண்ணலளவை ... ... | சஎரு |

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L., (சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர், No. 33, சித்திரக்குளம் கீழண்டைத்தெரு, மயிலாப்பூர், சென்னை.)

| | |
|---|---|
| திருமுருகாற்றுப்படை உரையாசிரியருரை | ... பகுதி—க, உ, ச. |

ஸ்ரீ. ச. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., (தமிழ்விரிவுரையாளர், லயோலாகாலேஜ், No. 133, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.)

| | |
|---|---|
| திருநாங்கூர் ... ... | கச௫ |

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—ங௲அ.] விக்கிரமஹூ கார்த்திகைமீ [பகுதி—க.
Vol. 38. November—December 1940. No. 1.

## கடல்கொண்ட லெமூரியா

[ஸ்ரீ. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

காலத்தாலும், அறிவாலும், நாகரிக உயர்வாலும் உலகத்தார் யாவரினும் நம்முடைய முன்னோர்களே முற்பட்டவர்கள் என்று கருதுவது மனித இயற்கை. பாபிலோனியர், யவனர், எகிப்தர், சீனர் முதலியோர் இவ்வாறே தம்முடைய இனத்தவர்களின் தொன்மையைக் கொண்டாடுகிறார்கள். தொன்மை ஏற்பட்டுவிட்டால் மேன்மையும் ஏற்பட்டுவிடும் என்பது அவர்களுடைய கருத்து. நமது நாட்டிலும் இவ்வாறே. மிகமிகத் தொன்மையான காலம் ஒன்றில் தமிழ்நாட்டில் பெரும்பகுதி கடலுள் ஆழ்ந்து போயிற்று என்றும், நம்முடைய பழைய இலக்கியங்களிற் பெரும்பாலன அப்போதுதான் அழிந்துபோயின என்றும் நமதுநாட்டில் ஒரு செய்தி பாரம்பரையாக வழங்கிவருகிறது. பழந்தமிழ் இலக்கியத்திலும் நாட்டைக் கடல்கொண்ட குறிப்புக் காணப்படுகிறது. ஆனால் நாட்டை வெள்ளநீர் கொண்ட வரலாறுகள் நமது மொழியில்மட்டுமன்றி ஒவ்வொருமொழியிலும் காணப்படுகின்றன. இவற்றை ஆராயும்போது, இவற்றுள் காணும் காலவேறுபாடுகளாலும், நிகழ்ச்சிவேறுபாடுகளாலும் இவை யாவும் ஒருகால் ஓரிடத்தில் நடந்த பெரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், நமதுமொழியிற்போலவே ஒவ்வொரு

மொழியிலும் அருமையான பண்டைக்கால இலக்கியங்கள் தொலைந்துபோயிருக்கின்றன. கிரேக்கபாஷையிலும், லத்தீன் பாஷையிலும் அடியோடு அழிந்துபோன அருமையான நூல்கள் கணக்கற்றன என்று மேலைநாட்டினர் வருந்துகிறார்கள். பிறநாட்டுச் செய்திகள் எங்ஙனம் ஆயினும் ஆகுக. நமதுநாட்டுச் செய்தியைச் சற்று விரிவாகக் கவனிப்போம்.

மிகமிகப் பழங்காலத்திலே தமிழ்நாடு மிகவும் விரிந்து, பரந்து, நாகரிக முன்னணியில் நின்றது. அப்போது தமிழ்நாட்டின் வட எல்லை வேங்கடம்; தென் எல்லை குமரி. இந்தக் குமரி என்பது இப்போது இந்தியாவின் தென்முனையாக உள்ள கன்னியாகுமரி முனையைக் குறிப்பதன்று; அதற்கு வெகுதூரத்துக்குத் தெற்கே இருந்த குமரி எனப்பட்ட ஆறு ஒன்றைக் குறிப்பது. இது பரம்பரை வரலாற்றுச்செய்தி. இந்தப் பரம்பரைச்செய்தி முற்றிலும் உண்மை என்று பலர் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது கட்டுக்கதை என்று பலர் மறுக்கிறார்கள். இரண்டு கக்ஷிக்கும் அத்தனை ஆதாரம் இல்லை; பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று வேறுசிலர் சும்மா இருக்கிறார்கள்.

குமரிமுனைக்குத் தெற்கே வெகுதூரம்வரை தமிழகம் விரிவடைந்திருந்தது என்று சொன்னவர்கள் பரம்பரைச் செய்தியையும், இலக்கியத்தில் காணப்படும் சிற்சில தொடர்களையுமே தங்களுக்கு ஆதரவுகளாகக் காட்டிவந்தார்கள். ஆதலால் பூமியின் தத்துவங்களை ஆராய்ந்துவந்த விஞ்ஞானிகள் சில வருஷங்களுக்கு முன்னால் வெளியிட்ட சிற்சில விஷயங்கள் அவர்களுக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தந்தன. விஞ்ஞானிகள் ஆராய்ந்து வெளியிட்டவற்றைக் கவனிப்போம். நாம் வாழும் பூமியின் மேற்பரப்பு இன்று இருப்பதுபோல் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருந்ததில்லை. காலக்கிரமத்தில் அதன் மேற்பரப்பு உருமாறிக்கொண்டுவந்திருக்கிறது. பழைய நிலங்கள் சில அழிந்துபோயின; பழைய கடல்கள் சில தூர்ந்துபோயின; சிற்சில புதிய நிலங்களும் மலைகளும் கடல்களினின்று உயர்ந்தெழுந்தன; நிலமாயிருந்த சிற்சில இடங்கள்

ஆழ்ந்து பெருங் கடல்களாயின. லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன்னதான ஒருகாலத்தில் ஆப்பிரிக்காவும் இந்தியாவும் நிலப்பகுதி ஒன்றால் பிணைக்கப்பட்டு, ஒரே நிலப்பரப்பாயிருந்தன. அந்த நிலம் இப்போது கடலுள் ஆழ்ந்துகிடக்கிறது. வால் நீண்ட குரங்குவகை ஒன்று அந்த நிலப்பரப்பிலே அதிகமாகப் பெருகியிருந்தது. அந்தக் குரங்குக்கு லீமர் என்று பெயர். அதன் பெயரைக்கொண்டு அந்தப் பிரதேசத்தை லெமூரியா அல்லது லீமர்நாடு என்று குறிப்பிடலாம்.

இவ்வாறு விஞ்ஞானிகள் குறிப்பிட்ட லெமூரியாவே பழைய தமிழகமாயிருந்திருக்கவேண்டும் என்று சிலர் உடனே முடிவுகட்டி விட்டார்கள். விஞ்ஞானிகள் குறிப்பிடும் காலத்தின் பழமை என்ன? அப்போது மனித இனம் பூமியில் தோன்றியாய்விட்டதா? பாஷை தோன்றியாய்விட்டதா? என்னும் விஷயங்களை இவர்கள் ஊன்றிக் கவனிக்கவில்லை. அந்தப்பிரதேசத்தின் மற்ற இயல்புகளையும் வரலாறுகளையும் இவர்கள் அத்தனை ஆராயவில்லை. தங்களுடைய நம்பிக்கைக்கு ஓர் ஊன்றுகோல் அகப்பட்டது; பிடித்துக் கொண்டார்கள்.

விஞ்ஞானிகள் சொல்லியவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு, பிறநாடுகளிலும் பற்பலர் வெவ்வேறு முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள்மட்டுமே தாங்கள் சொல்லுவதற்கெல்லாம் ஆதாரம் என்கிறார்கள் சிலர். வேறுசிலர் இரகசியமான சிற்சில இடங்களிலே, அநாதிகாலமாகக் காப்பாற்றிப் பாதுகாத்துவைக்கப்பட்ட சில இரகசியக் குறிப்புக்களே தாங்கள் சொல்லுவதற்கு ஆதாரம் என்கிறார்கள். இவர்களுள் ஒருவர் சேர்வே என்பவர். லெமூரியாவைப்பற்றி விரிவான நூல் ஒன்றை அவர் எழுதியிருக்கிறார். அந்நூலில் குறிப்பிட்டுள்ள விஷயங்களைத் தொகுத்துச் சுருக்கமாக இங்கே சொல்லுகிறேன்.

* * * * *

ஆதியில் மனிதன் தோன்றியது எங்கே? மெஸொபொட்டேமியா, எகிப்து, இந்தியா, அபிஸீனியா, சைனு, ஓகியோநதிப் பிரதேசம்—இவற்றுள் எங்கே தோன்றினுன் முதல் மனிதன்? முதன் முதலில் நாகரிகம் வளர்ந்தது எங்கே? ஓர் இடத்திலே தோன்றி, பிறகு அங்கிருந்து உலகம் முழுவதும் பரவிற்ரு? அல்லது ஒரே காலத்திலேனும் பல்வேறுகாலங்களிலேனும் இவ்வுலகப்பரப்பில் பல இடங்களில் வெவ்வேறு மனித இனங்களும் நாகரிகங்களும் தோன்றினவா? இவற்றுள் எந்த நாகரிகம் காலத்தினுல் முற்பட்டது? எது சிறந்தது?

இவ்வாறு ஒவ்வொருநாட்டிலும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் வெவ்வேறுவகையாய் விடையளிக்கிறூர்கள். இவர்கள் அனைவரும் கூறுவது தவறு. உண்மை என்ன? என்றுல், இந்நாகரிகங்கள் யாவும் மிகவும் தொன்மையான நாகரிகங்களே. ஆயினும், இவை யாவற்றினும் தொன்மைமிக்கதான நாகரிகம் ஒன்று இருந்தது. அதுவேதான் இவையாவற்றுக்கும் தாய்நாகரிகம் என்று சொல்லத்தகுந்தது. நாகரிகத்தின் ஆதி வளர்ப்புப் பண்ணை லெமூரியா என்னும் ஆதிநாடு. இப்பொழுது அது கடல்வாய்ப்பட்டுக் கடலின் அடியில் ஆழ்ந்துகிடக்கிறது.

சுமார் இரண்டுலக்ஷம்வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு பழங் காலத்தில் பூமியின் அமைப்பு இப்போது உள்ளதைப்போல் இல்லை. அமெரிக்கா ஐரோப்பாவோடும் ஆப்பிரிக்காவோடும் ஒட்டிய பெரிய நிலப்பரப்பாயிருந்தது. அக்கண்டங்களுக்கிடையே அட்லாண்டிக் மகாசமுத்திரமாக இப்போது இருக்கும் இடைவெளி இல்லை. இதற்கு நேர் மாருக ஆப்பிரிக்காவிலிருந்து தொடங்கிய மிகப் பெரிய நிலப்பரப்பு ஒன்று இந்துமகாசமுத்திரத்தின் பெரும்பகுதியை நிரப்பி, பசிபிக்மகாசமுத்திரத்தையும் கடந்து, அமெரிக்காவின் அண்டையிலிருந்து சிறிதுதூரம்வரையிலும் வியாபித்துக் கிடந்தது. இந்தியா, மலாய்நாடுகள், ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, பிலிப்பைன்தீவுகள், கிழக்கு இந்தியத்தீவுகள் முதலிய யாவும் இந்த நிலப்பரப்பினுள் அடங்கியிருந்தன. மிகவும் விரிந்து பரந்துகிடந்த இந்தப் பிரதேசந்தான் லெமூரியா.

இந்தப் பிரதேசத்திலேதான் முதன்முதலில் ஜீவராசிகள் தோன்றின. உயிரினங்கள் எப்பொழுது தோன்றினவோ அதே காலத்திலேதான் மனிதனும் படைக்கப்பட்டான். 'அற்பமான உயிரினங்கள் தோன்றி, வளர்ந்து பரிணமித்துவந்தன: வெகு காலத்துக்குப் பின்னரே மனிதன் பரிணாமக்கிரமத்தில் தோன்றினான்' என்னும் கொள்கை சரியன்று. லெமூரியாவில் உயிரினங்கள் யாவும் ஏககாலத்திலேதான் உண்டாயின.

அந்தக் கண்டத்தில் உயர்ந்த மலைகள் கிடையா. அங்கங்கே சிறு குன்றுகள் உண்டு. அவ்விடம் முழுவதும் பெரும்பான்மையும் சமவெளிப்பிரதேசம். சிற்சில இடங்களில் எரிமலைகள் இருந்தன. அவை நெருப்பையும், கற்குழம்பையும் கக்கி, அங்கு உள்ளவர்களுக்கு உயிர்ச்சேதத்தை அடிக்கடி உண்டாக்கிவந்தன. அங்கே உள்ள காற்று நீராவியைப்போல எப்பொழுதும் உஷ்ணமுள்ளதாயும், நீர்மய மிகுந்ததாயும் இருந்தது. இவ்விரண்டு காரணங்களாலும் அங்கே செடிகளும் மரங்களும் மிகவும் செழித்தோங்கி வளர்ந்தன. கொடிகள் அடர்ந்து பின்னிக்கிடந்தன. அப்போதுள்ள பெர்ன்செடிகள் பனையுயரம் வளர்ந்துநின்றன. அந்தக்காலத்து எறும்பு ஒவ்வொன்றும் இரண்டு அங்குல நீளம் இருந்தது. கரப்பான்பூச்சி ஒவ்வொன்றும் ஐந்து அங்குல நீளம் இருந்தது. குருவி பறப்பதுபோல் விர் என்று வெகுதூரம் அவை பறந்தன. அக்காலத்திலே டைனொஸார் என்ற மிருகம் ஒன்று இருந்தது. அதன் நீளம் நூறடி; நல்ல உயரம். அது வெளியே புறப்பட்டுவிட்டால் காடும் மேடும் தவிடுபொடி. மனிதர்கள் அதைக் கண்டு பயந்து நடுக்கத்தோடு உயிர்வாழ்ந்துவந்தார்கள். அந்தக் காலத்திலே பல வகைப் பக்ஷிகள் இருந்தன. அவற்றுள் ஒன்று மொட்டைத்தலைக் கழுகு; மிகப் பெரிய பக்ஷி. சாதாரணப்பாம்புகளுக்கும் விஷப் பாம்புகளுக்கும் கணக்கே இல்லை. எத்தனை பெரிய பாம்புகள்! ஒருவகைப் பாம்பு எழுபத்தைந்து அடி நீளத்துக்குமேல் இருந்தது. அது நீரிலும் நீந்தும். ஆனால் அங்கே மிகவும் அதிகமாய்ச் செழித்திருந்த பிராணி லீமர் எனப்படும் ஒருவகைக் குரங்கு. இதற்கு முகமும் நீளம்; வாலும் நீளம். மற்றப்படியெல்லாம் சாதாரணக்

குரங்கைப்போலவேதான் இருக்கும். சிற்சில குரங்குகள் நன்றாக வளர்ந்து நல்ல உயரமாயிருந்தன. இவை நின்றால் சுமார் ஆறடி உயரம் இருக்கும். இந்த லெமூரியாப்பிரதேசந்தான் மூ-தேவியின் தாய்நாடு.

இந்தப் பிரதேசத்திலிருந்த மனிதர்கள் சாதாரணமாக ஆறடி உயரமுள்ளவர்கள். பலர் ஏழடி உயரம்வரையில் வளர்வதும் உண்டு. அவர்கள் சுமார் நூற்றறுபது ராத்தல்முதல் இருநூறு ராத்தல்வரை எடையுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களின் உணவு பெரும்பான்மையும் தாவரவகைகளே எனினும் சிறு பிராணிகளையும் மீன்களையும் உணவாக உண்பதும் உண்டு. பழங்களையும் காய்களையும் அவர்கள் பறித்து உண்டுவந்தார்கள். ஒருவகை ரொட்டியைச் சுட்டுத் தின்றுவந்தார்கள். பெரிய மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்பதில்லை. ஆதலால், தாம் இருக்கும் இடத்தைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்லவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. புதிய நாடுகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஊக்கமும் அவசியமும் அவர்களுக்கு இல்லை. தாம் இருந்த இடத்திலேயே இருந்து அமைதியாகத் தங்கள் வாழ்நாட்களைக் கழித்துவந்தார்கள்.

அவர்களுடைய தலை உடலுக்கு ஏற்ற பருமனாயிராமல் அளவுக்குமிஞ்சின பருமன் என்று சொல்லும்படியாகத்தான் இருந்தது. நெற்றியும் நல்ல அகலம். ஆறு அல்லது ஏழு அங்குலம் இருந்தது. நெற்றியின் நடுவிலே, நெற்றியோடு மூக்கு ஒட்டும் இடத்திற்கு ஒன்றரை அங்குலத்துக்குமேல் எலுமிச்சம்பழத்தைப்போல் ஒரு மேடு இருந்தது. அந்தத் தோற்றத்தை நினைத்துப்பார்த்தால் அவர்களுடைய முகம் பார்ப்பதற்கு நன்றாயிராதென்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் அழகாகவே தோன்றியிருப்பார்கள். நம்முடைய மூக்கு உயர்ந்திருப்பது நம்முடைய கண்ணுக்கு அருவருப்பாகத்தோன்றுகிறதா? அவர்களுடைய கை நல்ல நீளம். அவர்கள் தாள்தோய் தடக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய தலைமயிர் குட்டை.

அந்நாட்டுப் பெண்கள் ஆடவர்களைக்காட்டிலும் உயரத்தில் குறைந்தவர்கள். அவர்களைக்காட்டிலும் தடித்த உடலையுடைய வர்கள். விசாலமான கண்களையும், சிறிய காதுகளையும், கூரிய முட்களைப்போன்ற சிறிய பற்களையும் உடையவர்கள். அவர்க ளுடைய பல்வரிசைகள் அழகாய் ஒழுங்காய் அமைந்திருக்கும். அவர்கள் ஆடவர்களைக்காட்டிலும் சிவந்தமேனியை உடையவர் கள். வெயிலில் அதிகமாகச் செல்லமாட்டார்கள். அப்படிச்செல்ல வேண்டியிருந்தால் மெல்லிய முகத்திரையையிட்டுச் செல்வார்கள். மனத்தைக் கறுக்கச்செய்யும் ஆடவர்களின் கண்களைத் தடுப்பதற் கல்ல இம்மூடிகள். முகத்தைக் கறுக்கச்செய்யும் சூரியனுடைய தீவிரமான கிரணங்களைத் தடுப்பதற்காகத்தான்.

நெற்றியிலுள்ள மேடு லெமூரியர்களுக்கு ஆறுவது புலனாக இருந்தது. கண்ணாகவும், காதாகவும், மூக்காகவும் அது பயன் பட்டுவந்தது. சிறிது தூரத்திலுள்ள காட்சியையே கண்ணால் பார்க்க முடியும். சிறிது தூரத்திலிருந்துவரும் ஒலியையே செவியால் கேட்க முடியும். சிறிது தூரத்திலிருக்கும் மணத்தையே மூக்கால் அறிய முடியும். ஆனால் இந்த அற்புதமான நெற்றிமேடோவெனின் வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள காட்சியைக் காணும் தூரதிருஷ்டிக் கண்ணாடியாகவும் வெகுதூரத்துக்கு அப்பாலுள்ள ஒலியைக் கேட் கும் ரேடியோக்கருவியாகவும், வெகுதூரத்துக்கு அப்பாலுள்ள வாசனையை நுகரும் அற்புத மூக்காகவும் இருந்தது. கண்ணை மூடிக்கொண்டு இந்த நெற்றிமேட்டையே தியானிப்பவர்கள் வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள மற்றவர்களுடைய கருத்துக்களை உணரமுடியும். தங்களுடைய எண்ணங்களையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கமுடியும். இதுமட்டுமன்று. இதன்மூலமாகப் பக்ஷி பாஷையையும் மிருகபாஷையையும் அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. மிருக பக்ஷிகளோடு அவர்களால் பேசவும் முடிந்தது. சாமானியமக்களாகிய நாம் பொருள்களுக்கு மூன்று பரிமாணங் கள் உண்டென்றுதான் நினைக்கிறோம். அவற்றை நீளம், அகலம், உயரம் என்று குறிப்பிடுகிறோம். ஆனால் லெமூரியர்களோவெனில் இந்த மேட்டின் உதவியால் நாலாவது பரிமாணத்தையும் உணர்ந்து வந்தார்கள்.

அவர்கள் கப்பலில் ஏறிச் செல்வதுண்டு. அவர்களுடைய கப்பல்களை ஓட்டுவதற்கு நீராவியை அவர்கள் பயன்படுத்தவில்லை. பாய்மரங்களை நிறுத்திக் காற்றின் துணையால் படகோட்டிவந்தார்கள். மிகவும் அற்புதமான சக்திவாய்ந்த கல் ஒன்று அவர்களிடம் இருந்தது. அதை நீரில் இட்டால் அது நீரைப்பிடித்துத்தள்ளும். அப்பேர்ப்பட்ட கற்களைத் தங்களுடைய கப்பலின் பின்புறத்திலே அவர்கள் பொருத்தினார்கள். கற்கள் நீரைப் பின்னால் தள்ளும். ஆதலால் கப்பல் முன்னால் போகும்.

காற்றைக்கொண்டு அவர்கள் எந்திரங்களைச் சுழலச்செய்து வந்தார்கள். ஒருவகைத் தாதுப்பொருளைக்கொண்டு விளக்கொளியைப்போன்ற ஒளியைப் பெற்றுவந்தார்கள். அவர்களுடைய வீடுகளைக் கருங்கல்லாலேனும் சலவைக்கல்லாலேனும் கட்டிவந்தார்கள். சுமார் பத்துப் பதினொரு அடி உயரத்துக்குச் சுவர்களை எழுப்புவார்கள். சுவர்களுக்குமேலே மரக்கொம்புகளைக் குறுக்காகவும் மட்டமாகவும் வைப்பார்கள். தழைகளைக்கொண்டு வேய்வார்கள். இவை யாவற்றுக்கும் மேலே களிமண்ணைக்கொண்டு பூசிவிடுவார்கள். வீடுகளின் கூரைகள் சுவர்களுக்கு வெளியே ஐந்தாறடி நீட்டிக்கொண்டிருக்கும். சுவர்களிலே வெயில் உறைக்காது; மழை தாக்காது. மண்ணினால் பானைமுதலியவைகளை அவர்கள் வனைந்து வந்தார்கள். சக்கரங்கள்கொண்ட வண்டிகளை அவர்கள் உபயோகிக்கவில்லை. படகுபோன்றவையாய், சக்கரங்கள் இல்லாத ஒரு வகை வண்டியைத்தான் அவர்கள் உபயோகித்துவந்தார்கள். வண்டி இழுப்பதற்கும் ஏறிச் சவாரிசெய்வதற்கும் ஒருவகை மிருகத்தைப் பழக்கியிருந்தார்கள். அது மெல்லிய உடலையுடையதாயும், நல்ல உயரமுள்ளதாயும் இருந்தது. ஒட்டகத்தைப்போன்ற மிருகம் அது என்று ஒருவாறு குறிப்பிடலாம். பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்த அணிகலன்களை அவர்கள் அணிந்து வந்தார்கள். வானத்தில் பறந்துசெல்லும் ஆகாயக்கப்பல் ஒன்றையும் வேண்டியபோது அவர்கள் உபயோகித்துவந்தார்கள்.

அவர்களுடைய மணச்சடங்குகள் நாம் அறிந்த சடங்குகள் ஒன்றையும் ஒத்தனவாக இல்லை. மணத்தை நாடும் மணமகனும் மணமகளும் ஊர்ப்பெரியார்களிடமும் தங்கள் குருவினிடமும் சென்று தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்கள். பிறகு பொதுக்கூட்டம் கூடும். கூட்டத்தார் மணமகனையும் மணமகளை யும் நடுவே நிறுத்தி, அவர்களிடமுள்ள பொருள்கள் எல்லாவற்றை யும் ஒன்றும் பாக்கியில்லாமல் வாங்கிக்கொள்வார்கள். அவர்கள் மேலுள்ள ஆடைகளையும் ஒருதுணியும் இன்றி வாங்கிவிடுவார்கள். அந்த நாட்டிலே இதைக் குறித்து வெட்கம் என்பது கிடையாது. 'தெய்வம் படைத்த உடலைப்பற்றி வெட்கப்படுவானேன்?' என்பது அவர்களுடைய கருத்து. ஒரு துணியும், ஒரு கருவியும், வேறொன்றுமே இல்லாத வெறுங்கையர்களாய் அவர்கள் இருவரை யும் ஆக்கியபிறகு, அவர்கள் இருவரையும் ஊருக்கு அடுத்தாற் போல் உள்ள காட்டின் ஓரத்திலே கொண்டுவிடுவார்கள். காதலர் இருவரும் காட்டுக்குள் ஐம்பதுமைல்தூரம் செல்லவேண்டும். அங்கே இரண்டுமாதம் வாழவேண்டும். பிறகுதான் ஊருக்குத் திரும்பவேண்டும். திரும்பவரும்போது, இருவரும் காட்டிலே பறித்த தழைகளையேனும் மரவுரியையேனும் ஆடையாக அணிந்து கொண்டுவரவேண்டும். கொடிய விலங்குகளால் தாக்குறாமல் காட்டில் நல்வாழ்வு வாழ்ந்திருக்கவேண்டும். ஒருவர்மேல் ஒருவர் அன்பையுடையவராயும், ஒருவர் செய்த காரியங்கள் அனைத்தை யும் மற்றொருவர் ஒப்பிபவராயும் இருக்கவேண்டும். இந்தப் பரீக்ஷை யில் வெற்றிபெற்றவர்மட்டிலுமே இல்வாழ்க்கைபுரியலாம்.

அந்நாட்டிலே சாதாரணமாகப் பிணியுண்டும், நோய்வாய்ப் பட்டும் சாவது கிடையாது. கொடிய விலங்குகளால் கொல்லப் பட்டுச் சாவோர் சிலர்; எரிமலைகளின் வெடிப்புக்களால் சாவோர் சிலர். ஆனல் பெரும்பாலார் சாவது இவ்வாறன்று. இவ்வுலக வாழ்க்கையில் தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுய்விட்டது, தம்முடைய பலவகைக் கடன்களையும் தீர்த்தாய்விட்டது; என்று முடிவுசெய்த ஒருவன், தான் கொண்ட முடிவைத் தன்னுடைய சுற்றத்தாருக்குத் தெரிவிப்பான். பிறகு நல்லவேளையில், ஊருக்கு

வெளியே சென்று, கிழக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு, தனக்குச் சாவுவரவேண்டுமென்ற தியானத்தோடு, அமைதியாய் அன்ன ஆகாரமின்றி இருப்பான். அவன் நினைத்த வேளையில் உயிரை விட்டுவிடும் திறமை அவனுக்கு உண்டு. உயிரை இவ்வாறு தியாகம் செய்தவனுடைய உடல் இரண்டு மூன்று நாளில் சுண்ணும்பு போலாகிப் பொடிப்பொடியாய் உதிர்ந்துவிடும். ஆதலால் அந்தக் கண்டத்தில் பிணக்குழிகள் என்பவை அதிகம் கிடையா.

இப்பேர்ப்பட்ட நாட்டிலே இப்பேர்ப்பட்ட மக்கள் சுமார் ஒருலக்ஷம் வருஷகாலம் தங்களுடைய சிறந்த நாகரிகத்தைக் கேடின்றி வளர்த்துவந்தார்கள்: அதாவது இப்போதைக்கு இரண்டு லக்ஷம்வருஷத்துக்கு முன்னுள்ள ஒருகாலம் முதல் ஒருலக்ஷம் வருஷத்துக்கு முன்னுள்ளகாலம் வரையில். இப்படி அவர்கள் நல்வாழ்க்கைபுரிந்துவருங்காலத்தில் அவர்கள் வாழ்ந்துவந்த கண்டத்தில் சிற்சில விசேஷநிகழ்ச்சிகள் நிகழலாயின. எரிமலைகள் சுறுசுறுப்பாய்த் தீயைக் கக்கத்தொடங்கின. மிகவும் வலிமை பொருந்திய காந்தசக்திகள் அந்தக் கண்டத்தின்மீது அலையலை யாய் மோதலாயின. அவற்றுல் அந்த நிலப்பரப்பிலே சில மாறுதல்கள் தோன்றின. நிலத்தின் மேற்குப்பகுதி கடலுள் மூழ்கத் தொடங்கிற்று. அப்போது அத்தேசத்து மக்களிற் சிலர் கிழக்காக ஒதுங்கினர்: வேறு சிலர் அப்பொழுதுதான் தனியாகப் பிரிந்து கொண்டிருந்த ஆப்பிரிக்காவில் குடியேறினர்.

எண்பத்திரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் மறுபடியும் ஒருமுறை இவ்வாருன நிகழ்ச்சிகள் தோன்றின. நாட்டில் இன்னும் ஒருபகுதி கடலுள் ஆழ்ந்தது. வேறுசில மக்கள் நாட்டைவிட்டு வெளியேசென்று குடியேறினர்.

எழுபத்தையாயிரம் வருஷங்களுக்குமுன் மறுபடியும் ஒருமுறை இதே வகையான நிகழ்ச்சிகள் சற்றே அதிகமான அளவில் நிகழ்ந்தன. லெமூரியாவானது ஆப்பிரிக்காவினின்றும் ஆசியாவினின்றும் பிரிந்து மிகப் பெரிய தீவாக விளங்கிற்று. அதற்கு மேற்கிலும் வடக்கிலும் உள்ளது இந்துமகாசமுத்திரம், தெற்கே உள்ளது

தென்கடல், கிழக்கே உள்ளது பசிபிக் மகாசமுத்திரம். இந்தக் காலத்திலேதான் மலாய்நாடுகளும் லெமூரியாவும் வேறாகப்பிரிந்தன. ஆஸ்திரேலியா ஒரு தனித்தீவாக வேறாகப்பிரிந்ததும் இப்பொழுதுதான். கிட்டத்தட்ட இதே சமயத்தில், அமெரிக்காவானது அதனோடு நிலத்தால் பிணைப்புண்டிருந்த ஐரோப்பாக் கண்டத்தினின்றும் ஆப்பிரிக்காக்கண்டத்தினின்றும் பிரிந்து கொஞ்சங்கொஞ்சமாக மேற்குப்பக்கமாக நகரத்தொடங்கிற்று.

இப்படியாக ஓர் இருபத்தையாயிரம் ஆண்டுகள் சென்றன. சுமார் ஐம்பதினாயிரம்வருஷங்களுக்குமுன் மேற்காக நகர்ந்து கொண்டேவந்த அமெரிக்கா லெமூரியாக்கண்டத்தில் வந்து மோதிற்று. இரண்டு கண்டங்களும் மோதவே, அவை மோதிய இடத்திலுள்ள நிலமானது அலைபோல் எழுந்து உயர்ந்து மலையாயிற்று. இம்மலைதான் இப்போது அமெரிக்காவின் மேற்கோரத்தில் உள்ள மலை. இவ்வாறு அமெரிக்கா மேல்புறமாக நகரும்பொழுது, அதன் கீழ்புறத்திலுள்ள மிகப் பெரிய அட்லாண்டிக் மகாசமுத்திரத்தினின்று நிலப்பரப்பு ஒன்று, கடல்மட்டத்திற்குமேல் எழுந்து, புதிய கண்டமாயிற்று. இதைத்தான் புது அட்லாண்டிஸ் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கண்டம் தோன்றியகாலத்தில் லெமூரியாவின் தொன்மை நாகரிகம் ஒன்றரைலக்ஷம்வருஷம் செழித்துவளர்ந்தாய்விட்டது. இப் புதியகண்டத்தின் ஒரு பகுதியிலே பழைய நாகரிகவாழ்க்கைபுரிந்தவர் சிலர் பிற்காலத்தில் குடியேறி, அங்குள்ளவர்களோடு உறவாடிப் புதிய நாகரிகம் ஒன்றைத் தோற்றுவித்தார்கள். இதைத்தான் நாம் இக்காலத்தில் மாயாநாகரிகம் என்கிறோம்.

மேலும் ஓர் இருபத்தையாயிரம் ஆண்டுகள் சென்றன. லெமூரியாவின் மேற்கோரமானது மேன்மேலும் கடலுள் ஆழ்ந்து கொண்டேவந்தது. அங்குள்ளோர் சிலர் ஆசியாவிலும், சிலர் ஆஸ்திரேலியாவிலும், சிலர் பசிபிக்மகாசமுத்திரத்தில் இப்போது காணப்படும் சிறு தீவுகளிலும் குடியேறி உயிர்தப்பினார்கள்.

பின்னும் ஓர் ஏழாயிரம் ஆண்டுகள் சென்றன. அந்தக்காலம் இப்போதைக்குப் பதினெண்ணாயிரம் வருஷங்களுக்கு முந்திய காலம். லெமூரியாவிலிருந்த மக்கள் குடியேறிய எகிப்திலும், செங்கடல்பிரதேசங்களிலும் நாகரிகங்கள் செழித்தோங்கி வளர்ந்து கொண்டிருந்தன. புது அட்லாண்டிஸ் கண்டத்திலும் அப்போது நாகரிகம் தலைசிறந்துவிளங்கிக்கொண்டிருந்தது.

பின்னும் ஒரு மூவாயிரம் ஆண்டுகள் சென்றன. இந்தக் காலத்தில்தான் தொன்மையான லெமூரியா நாகரிகமும், நவீனமான அட்லாண்டிஸ் நாகரிகமும் ஒன்றாகக் கலந்து மாயாநாகரிகமாகச் சிறப்படைந்திருந்த காலம். மூ-தேவி என்னும் அரசி மாயா நாட்டில் அரசுபுரிந்தது இக்காலத்திலேதான்.

மேலும் ஒரு மூவாயிரம் ஆண்டுகள் கழிந்தன. சுமார் பன்னீராயிரம் வருஷங்களுக்குமுன் மிகப் பெரிய விபத்து ஒன்று நிகழ்ந்தது. காந்தசக்தியானது மிகப்பெரிய அலையாக மோதிற்று. பன்னிரண்டுவருஷங்களுக்குள் அட்லாண்டிஸ்கண்டம் முழுவதும் கடலுள் ஆழ்ந்து தொலைந்துபோயிற்று. அக்கண்டத்தின் கிழக்கோரத்தில் சிற்சில மலைப்பிரதேசங்கள் இருந்தன. அவைமட்டிலும் முழுதும் கடலுள் அமிழ்ந்துபோகவில்லை. அவைதாம் இப்பொழுது அஜோர்ஸ், மடீரா என்று வழங்கும் தீவுக்கூட்டங்கள். இதேசமயத்தில் லெமூரியாவில் கொஞ்சநஞ்சம் நீர்மட்டத்துக்கு மேல் தலைதூக்கிக்கொண்டிருந்த இடங்கள் முழுதும் கடலுள் ஆழ்ந்துவிட்டன. அங்கங்கே சிற்சில தீவுகள்மட்டும் இன்றுவரையிலும் அமிழ்ந்துபோகாமல் தலைதூக்கி நின்றுகொண்டிருக்கின்றன.

இப்படி அழிந்துபோன நாட்டிலுள்ள மக்களின் கதி என்ன ஆயிற்று? எல்லாருமா அழிந்துபோனார்கள்? இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவ்வப்போது பலர் வெளியேறி, பூமியிலே வெவ்வேறு இடங்களிலே தங்கிப் பற்பல தொன்மை நாகரிகங்களைத் தொடங்கினார்கள். அவர்களின் பரம்பரையினர் அங்கங்கே வாழ்ந்துவந்தார்கள். சுமார் இரண்டாயிரம்வருஷங்களுக்குமுன்னால் இருந்த நிலையைப் பார்ப்போம். ஈஜியன்பிரதேசத்தினர், எகிப்து

நாட்டினர், ஹிட்டைட், ஆமோரைட் என்னும் வகுப்பினர், பாரசீக நாட்டினர், இந்தியர், ஹூணர், சீனர் என்னும் எட்டு ஜாதியாரும் லெமூரியாவினின்றும் வெவ்வேறு காலத்தில் குடியேறியவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுள் இந்தியர்கள் எனப்படுவோர் லெமூரியா நாட்டினரின் சந்ததியார். பிறஜாதிக் கலப்பற்ற தனி லெமூரியர்கள் இவர்களே என்றுகூடச் சொல்லலாம். இவர்கள் லெமூரியாவிலிருந்து எப்படியோ வெளியேறி, எங்கெங்கெல்லாமோ சுற்றித் திரிந்து, கடைசியாக இந்தியாவின் வடமேற்கிலுள்ள பஞ்சாப் மாகாணத்தை அடைந்தார்கள். அங்கே கறுத்தமேனியையுடைய சிலர் இருந்தார்கள். அந்த நாட்டிலே தங்கிய லெமூரியர் சுமார் ஆயிரத்தைந்நூறுவருஷங்களுக்குமுன் தங்களுடைய வாழ்க்கையையும், பூர்வசரிதையையும், தங்களுடைய மதத்தையும் பற்றிப் பாடல்களை இயற்றினார்கள். அவற்றின் தொகை ஆயிரத்துக்குமேல் இருக்கும். அவற்றைத்தான் இக்காலத்தில் ரிக்வேதம் என்று சொல்லுகிறார்கள். அதன்பிறகு ஸம்ஸ்க்ருதமே அவர்களின் தேச பாஷையாக ஆயிற்று. மலைகளைக் குடைவதிலும், மலைக்கோவில்களைக் கட்டுவதிலும் அவர்கள் மிகவும் திறமையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களிற் பலர் இலக்கியத்திலும், நற்கலைகளிலும் மிகவும் தேர்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய மதகுருக்களுக்கு வரவரச் செல்வாக்கு மிகுந்துவந்தது. அரசர்களைக் காட்டிலும் அவர்கள் மேன்மையான பதவியைப் பெற்றார்கள். இந்தக்கூட்டத்தார் பிறநாடுகளைப் படையெடுத்து, அவற்றையும் கைப்பற்றிக்கொண்டார்கள். முதலில் வைதிகமதம் தோன்றிற்று. பிறகு புத்தர் தோன்றினர்; பௌத்தமதம் ஏற்பட்டது. பிறகு வரவர நாடு க்ஷீணம் அடைந்தது.

ஆனால் இக்காலத்திலுங்கூட லெமூரியாவின் தொன்மை நாகரிகத்தை விடாது கைப்பற்றிவரும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்கா நாட்டிலே, காலிபோர்னியாமாகாணத்திலேயுள்ள சாஸ்தாமலை எனப்படும் பழைய எரிமலையின் நடுவயிற்றிலே, விஸ்தாரமான இடத்தைக் குடைந்து எடுத்துவிட்டு, அங்கே

அற்புதமாளிகைகளைக்கட்டி வாழ்ந்துவருகிறார்கள். சாஸ்தா எரிமலையின்வாயினின்று சிற்சிலவேளைகளில் தோன்றும் ஒளி இவர்களுடைய மாளிகைகளில் எரியும் விளக்குகளின் சோதி. அம்மலைவாயினின்று சிலபோதுகளில் கிளம்பும் புகை இவர்களுடைய அடுப்புக்களினின்று கிளம்பும் புகை.

இந்தப்பிரதேசத்தைச் சாமானிய மனிதர்களால் நெருங்க முடிவதில்லை. ஏதோ ஒரு சக்தி அவர்களைக் கிட்டநெருங்கவொட்டாமல் தள்ளுகிறது. ஆனால் சிற்சிலவேளைகளில் இவர்கள் வெளியே வருவதையும், ஆகாயவிமானம் ஒன்றில் இவர்கள் ஏறிப் பறப்பதையும் பலர் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இவர்களை ஒருவராலும் நெருங்கிப் பேசமுடிவதில்லை. இவர்களைப் படம்பிடிக்கவும் முடிவதில்லை. படம்பிடிக்க முயன்றால் காற்றில் மறைந்துவிடுகிறார்கள். அத்தனை அற்புத சக்திவாய்ந்தவர்கள்.

* * * * *

லெமூரியாநாட்டையும் அந்நாட்டில் குடியிருந்த மக்களையும் பற்றி இந்நூலில்சொல்லும் விருத்தாந்தம் சுருக்கமாக இதுதான். திபேத்துநாட்டிலே வெகு இரகசியமாகக் காப்பாற்றிவைக்கப்பட்ட பழஞ்சுவடிகளிலிருந்தும், எத்தனையோ பழைய நூல்களிலிருந்தும், 'இந்தியாவிலே பழங்காலத்தில் வாழ்ந்தவராயும் சரித்திரநூல் விற்பன்னராயும் உள்ள வால்மீகி எழுதிய நூல்களிலிருந்தும்' திரட்டித்தொகுத்த விஷயங்கள் இவை என்று சொல்லப்படுகிறது.

இந்நூலில் காணப்படும் விஷயங்கள் உண்மையான ஆராய்ச்சி வகையைச் சேர்ந்தவையா? அல்லது போலி ஆராய்ச்சிகளா? அல்லது வெறும் கற்பனையும் கட்டுக்கதைகளுமா? இந்நூலில் குறிப்பிடப்பட்ட லெமூரியாவுக்கும் தமிழகத்துக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? உண்டாயின் தமிழைப்பற்றியும் தமிழ்மக்களைப்பற்றியும் இந்நூலில் ஒருபேச்சும் எடுக்கப்படவில்லையே! ஏன்? அதற்குப் பதிலாக வேறு யாரையெல்லாமோபற்றி என்னவெல்லாமோ சொல்லப்படுகின்றனவே! அவையும் ஏன்?

எனக்கு என்ன தோன்றுகிறது என்றால்—. அது கிடக்கட்டும். உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

# கம்பராமாயணசாரம்

[ஸ்ரீ. ராவ்சாஹிப் வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

செந்தமிழ் 37-ஆம் தொகுதியின் ருஉ0-ஆம் பக்கத் தொடர்ச்சி

## பிரமாத்திரப்படலம்

இந்திரசித்து பிரமாத்திரத்தைப் பிரயோகித்து இலக்குமணனையும் வானரரையும் உயிரொடுங்கச்செய்ததைக் கூறுவது.

### இந்திரசித்து போர்க்குப் போதல்

[ மகரக்கண்ணன்முதலியோர் கொல்லப்பட்டதைத் தூதர் கூறக் கேட்ட இராவணன், இந்திரசித்தை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தான். அவர்கள் அவனை அணுகி, 'உன்தந்தை, உன்னை அழைக்கின்றான்' என, அவன், 'போர்க்களத்துக்குப்போன வீரரெல்லாம் பொன்றினரோ?' என, தூதர், 'அங்கே போனார், நீ ஒருவன் தவிர, ஆர் திரும்பினர்?' என, அவன், வேகமாக ஏகி, இராவணனை அடைந்து, 'ஐயா! மக்கள் மடிந்தார்களென்று வருந்தாதிரு. குரங்குகளின் பிணக்குவியல்களையும் இராமலக்குமணரின் உயிர்பிரிந்த உடல்களையும் சீதை காண்பாள்' (ஆக, அவர்கள் அனைவரையும் அதஞ்செய்வேன்) என்று கூறி, தந்தையை வலம்வந்து வணங்கி, விடைபெற்று, ஆயிரம் சிங்கங்கள் பூண்ட தேரேறி, சங்கு, ஊதுகொம்பு, எக்காளம் முதலிய போர்வாத்தியங்கள் முழங்க, அறுபதுவெள்ளம் சேனையோடு போர்க்களத்துக்குப் போனான். போகும்போது, தேர்ச்சக்கரங்கள் உருளும் ஓசையும், யானைகள்மீதேயுள்ள பறைகளும் பக்கத்தே தொங்கும் மணிகளும் ஒலிக்கும் ஒலியும், குதிரைகளின் கிண்கிணிமாலைகள் கிலுங்கும் தொனியும், வீரர்கள் காலில் அணிந்த வீரகண்டைகளின் நாதமும் எங்கும் பரவின. வில்லொலியும், வீரர் ஆர்ப்பொலியும், தோள்கொட்டும் ஒலியும், அதட்டொலியும், குதிரைகள் கனைக்கும் ஒலியும், நால்வகைப்படைகள் நடக்கும் ஒலியும் கடலொலியை அடங்கச்செய்தன. சேனை செல்லுதலால் எழுந்த தூள், விண்ணினின்று போர்காணும் தேவமாதர்கண்கள் நீர்ததும்பச்செய்தது.

## இந்திரசித்து, படைகளை அணிவகுத்து, வீர ஆரவாரம் செய்தல்

இந்திரசித்து, அன்றிலின் மூக்கு, கண், சிறகு, உடம்பு, நகம், வால் ஆகிய உறுப்புக்களின் வடிவம்பொருந்தக் கிரௌஞ்சவியூக* மாகத் தன்படையை அணிவகுத்து, சங்கநாதம் செய்து, வில்நாணொலியெழுப்பி, வீர ஆரவாரஞ்செய்தான். அதனால் வானரரெல்லாம், காது கிழிய, நெஞ்சு பிளக்க, கால்கள் தள்ளாட, கைகள் பற்றிய மலைகளையும் மரங்களையும் நழுவவிட, உடம்பு நடுங்க, வாய் உலர, 'செத்தோம்' என்றார்கள். இராமலக்குமணரும், விபீடணனும், அநுமன் சுக்கிரீவன் அங்கதன் முதலான படைத்தலைவரல்லாத எல்லா வானரரும் அஞ்சியோடினர்கள். வானரரோடக்கண்ட இராக்கதசேனை, உற்சாகமுற்று ஆரவாரித்தது.

## இராமலக்குமணர் இராக்கதரோடு பொருதல்

இராமன் அநுமான்தோள்மேலும், இலக்குமணன் அங்கதன் தோள்மேலும் ஏறினர்கள். ஏறிய இருவரும், முறையே, கருடாரூடனான (கரிய) திருமாலையும் இடபாரூடனான (சிவந்த) சிவபிரானையும் ஒத்தார்கள். இராமன், 'இந்திரசித்து தேவாத்திரங்களை விடுத்தால், நீங்கள் தாங்கமாட்டீர்கள்' என்று நீலன் முதலியோரைப் பின்னே நிற்கும்படி கூற, அவர்கள், பின்னின்றார்கள். இராம லக்குமணர், தேர்கள்மேலும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும் காலாட்கள்மேலும் கணைமாரி சொரிந்தார்கள். சிவபிரான் மேருவில்லாலெய்யத் திரிபுரத்து அசுரப்படை அழிந்ததுபோல, அரக்கப்படை அழிந்தது. தன் தேரிலே வில்லையூன்றிக்கொண்டுநின்ற வீராதிவீரனான இந்திரசித்து, இராமலக்குமணர் செய்யும்போரை நோக்கித் தன்பக்கத்து வீரர்கள் செத்துவிழுவதைக் கண்டானேயன்றி, இன்னாரின்னார் இறந்தாரென்று பகுத்துக் காணானான். ]

131 செய்கின்ற ரிருவர் வெம்போர் சிதைகின்ற சேனை நோக்கின்[1]
ஐயந் தானில்லா[2] வெள்ள மறுபது வீக[3] வென்று
வைகின்ற ரல்ல ராகின்[4] வரிசிலை வலத்தான் யாளை
எய்கின்ற ரல்ல ரீதோ ரிந்திர சால[5] மென்றான்.

* கிரௌஞ்சம் - அன்றிற்பறவை. வியூகம் - படைவகுப்பு.

கொண்டுகூட்டு: 'வெம்போர் செய்கின்றார் இருவர். சிதைகின்றசேனை (யை) நோக்கின், (அது) ஐயந்தான் இல்லா(மல்) அறுபது வெள்ளம். 'வீக' என்று வைகின்றாரல்லராகின், வரிசிலைவலத்தால் (சேனை) மாள எய்கின்றாரல்லர். ஈது ஓர் இந்திரசாலம்' என்றான்.

பொருள்: '(நான் காண்கின்ற இந்தக்) கொடிய போரைச் செய்கின்றவர்கள் இருவரே. (இந்த இரண்டேபேர் செய்கின்ற போரினால்) அழிந்த சேனையைப் பார்த்தாலோ, (அது) சந்தேகமில்லாமல் அறுபதுவெள்ளம் (தொகையுடையதாயிருக்கின்றது! இத்தனை பெருந்தொகைகொண்ட சேனை இவ்வளவு சீக்கிரமாக அழிந்ததை ஆராய்ந்தால், இவர்கள் இந்தச் சேனைமுழுவதும்) 'செத்திடுக' என்று சாபமிட்டார் (ஆக, அந்தச் சாபத்தால் இத்தனை சேனையும் அழிந்திருக்கவேண்டும். சாபமிட்டார்) அல்லரென்றால், வில்வலியினால் (இத்தனை சேனையும்) மாள எய்தார் (ஆகவேண்டும். அப்படி எய்தாரோவென்றால், எய்தார்) அல்லர், (எய்தலால் இத்தனை சேனையையும் இவ்வளவு சீக்கிரத்தில் கொல்லல் முடியாதாதலால்.) இது (-இவ்வளவு சேனை இவ்வளவு விரைவாக அழிந்ததன் காரணம், வாய்ச்சாபமன்று, கைச்*சாபமும்(-வில்லும்) அன்று, வேறு யாதெனில்,) இந்திரசாலவித்தை' என்றான். '(இராக்கத சேனையை இராமலக்குமணர் கைச்சாபத்தால்—வில்லால்—எய்து அழித்தாரல்லர், வாய்ச்சாபத்தால் வைது—சபித்து—அழித்தாரக ளென்னலாம். அன்றி, இவர்கள் விற்றொழில் இந்திரசாலவித்தை போல ஆச்சரியமாயிருக்கிறதென்னலாம்' என்று இந்திரசித்து கூறினானென்றவாறு.)

சிதைதல் - அழிதல். ஐயம் தான் இல்லா - சந்தேகமில்லாமல். 'தான்' அசைச்சொல். 'அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு' என்பதில், 'அஞ்சாமல்' 'அஞ்சா' என வந்ததுபோல், இங்கே 'இல்லாமல்' 'இல்லா' என வந்தது. வீக - அழிந்திடுக. வைதல் - சபித்தல். வரிதல் - கட்டுதல். வரிசிலை - (பலமுள்ளதாகும்படி நரம்பு அல்லது கயிற்றினால் சுற்றிக்) கட்டப்பெற்ற வில். வலம் - வலி. இந்திரசாலம் - அற்புதங்களைக் காட்டும் வித்தை.

* சாபம் - தவத்தோர் சபித்துக்கூறும் மொழி (தமிழகராதி); வில்.

பாடபேதம்: [1] நோக்கி. [2] அறுக, இல்லை. [3] அறுபதும் வீக. [4] அல்ல வாக, அல்லவாகின். [5] ஈதா மிந்திர ஞாலம், எந்த விந்திர சாலம், ஈதோ ரிந்திர ஞாலம், எந்த விந்திர சாலம்.

'வீக' என்ற பாடம், திருநெல்வேலிக்கவிராயர்வீட்டு ஏட்டுப்பிரதியிற் கண்டது.

132 அங்கத ரனேக கோடி யுளரெனு[1] மனும னென்பார்க்கு[2]
இங்கினி யுலக மெல்லா[3] மிடமில்லை போலு மென்னும்[4]
எங்குமிம்[5] மனித ரென்பா ரிருவரே கொல்லென்[6] றுன்னும்
சிங்கவே றனைய வீரர் கடுமையைத் தெரிகி லாதான்[7]

கொண்டுகூட்டு: சிங்க ஏறு அனைய வீரர்கடுமையைத் தெரிகிலாதான், 'அங்கதர் அனேககோடியுளர்' எனும், 'அனுமனென்பார்க்கு இங்கு இனி உலகமெல்லாம் இடம் இல்லைபோலும்' என்னும், 'எங்கும் இம்மனிதரென்பார் இருவரேகொல்?' என்று உன்னும்.

பொருள்: (அங்கதனும், அனுமானும், இவ்விருவர்மேலிருந்தபடியே இராமலக்குமணரும், அதிவேகமாகத் திரிதலால், எங்கே பார்த்தாலும் அவர்கள் தோற்றங் கண்டு), இந்திரசித்து, அந்த வீரருடைய வேகத்தைத் தெரியமுடியாதவனாய், 'அங்கதர் பல கோடியர் இருக்கின்றார்கள்' என்றும், '(எண்ணிறந்த) அனுமருக்கு இந்த உலகமுழுதும் போதிய இடமாயில்லை' என்றும், '(இராமலக்குமணர்) எங்கும்(காணப்படுகின்றார்களே) இம்மனிதர் இருவரேயோ?' என்றும் எண்ணினான்.

உளர் - இருக்கின்றார். போலும், அசைச்சொல். கொல், ஐயப்பொருளைக் காட்டும் இடைச்சொல். உன்னும் - எண்ணும். சிங்க ஏறு - ஆண்சிங்கம். கடுமை - வேகம். தெரிகிலாதான் (தெரியமாட்டாதவன்) என்பதில், 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்.

முந்தியபாட்டில் இராமலக்குமணருடைய விற்றொழிலின் கடுமையும், இந்தப்பாட்டில், அனும அங்கதர் சாரிதிரியும் கடுமையும், வியந்துகூறப் பட்டன.

பாடபேதம்: [1] உளவெனும். [2] என்பாற்கு. [3] யாவும். [4] என்பான். [5] எங்குமே. [6] இருவர்கொல்லென்ன, இருவரேகொல். [7] தெரிக்கிலாதான்.

## இந்திரசித்து விரோதநிகழ்ச்சிகளைக் காணுதல்

[ இராக்கதசேனை பெரும்பாலும் அழிந்ததைக்கண்டு, தேவர்கள் ஆரவாரித்துப் பூமாரி பொழிவதையும், (தான் தோற்பதற்கு அறிகுறியாகத்) தன் இடத்தோள் துடிப்பதையும், எந்தத் திசையைப் பார்த்தாலும், அங்கே, பிணங்கள் பரந்துகிடப்பதையும், (மற்றைப் பிணங்களோடு) யானைப்பிணங்களையும் இழுத்துச்செல்லும் இரத்தப்பேராற்றையும் இந்திரசித்து, காண்பானானான். இராக்கதர் பெரும்பாலோர் இறந்தும், இந்திரசித்தினிடத்துள்ள அச்சத்தினால், முன் ஓடிப்போன வானரர்கள் திரும்பிவந்தாரில்லை. அரக்கர்படை அழிந்தது கண்டு, அனுமான், தோள்கொட்டி ஆரவாரித்தான். அந்த ஆரவாரத்தைக் கேட்டுத் தேர்வீரர்கள் சிலர், அஞ்சித் தம்மை அறியாமலே தேர்களினின்று கீழேவிழுந்தார்கள்; சிலர், கையிலிருந்த படைக்கலங்களை எறிந்துவிட்டுப் பூமியில் இறங்கிப் போர்க்களத்தைவிட்டுப் போக எத்தனித்தார்கள். அவர்களை இந்திரசித்து, கோபித்துப்பார்த்து 'அஞ்சின அனைவீரும் ஊர்க்குப்போங்கள். ஆரவார ஒலிக்கே அஞ்சிஉடைந்தவர்கள், எவ்வாறு போர்புரிவீர்கள். இங்கே செத்துக்கிடக்கின்ற வீரர்களோடு நீங்களும் செத்தவர்களே' என்றுகூறித் தானொருவனே இருவரையும் எதிர்வானானான். அவன், தங்களை இகழ்ந்து சினந்துகூறியதைக் கேட்ட ஆயிரகோடி தேர்வீரர்களும், உரோசங்கொண்டு போர்புரியப் புறப்பட்டார்கள்.

## இந்திரசித்தின் தலையை அறுப்பதாக இலக்குமணன் சபதம்செய்தல்

இந்திரசித்தும் தேர்வீரரும் போர்புரியவருதலைக் கண்ட இலக்குமணன், இராமபிரானை வணங்கி, 'இந்திரசித்தின் நாகபாசத்தினால் நான் கட்டுண்டு தோல்வியடைந்தவனென்று உலகத்தார் சொல்லுவார்கள். அவர்கள், "அன்புடைய நண்பருக்கு அபாயம் (நாகபாசக்கட்டு) வராமற் காக்கமாட்டாதவன், வந்த அபாயத்தை (அந்தக் கட்டை)ப் போக்கமாட்டாதவன், (தன்னையும் நண்பரையும் கட்டியவனை யெதிர்த்துச் சென்று) கட்டுதலை ஆக்கமாட்டாதவன். (செய்யக்கடவனவான இத்தனை செயல்களில் ஒன்றையும்

செய்யாத தான் உயிரைப்போக்குதல் உரியதெனச்) சாகமாட்டாத வன்'' என்று கூறும் வசை உண்டாயிருக்கின்றது. யான் உன் கண் முன்னே இந்திரசித்தின் தலையை அறுத்துத் தள்ளாவிட்டால், யான் உனக்குச் செய்துள்ள பணிவிடைப்பயனை யான் அடையாமற் போவேனாக' என்று கூறினான். ]

## இலக்குமணன்சபதத்தைக் கேட்டுத் தேவர் ஆரவாரித்தல்

133 வல்லவ னவ்வுரை[1] வழங்குங் காலையில்[2]
அல்லனீங் கினமெென[3] வமர ரார்த்தனர்
எல்லையி லுலகங்க ளெவையு[4] மார்த்தன
நல்லற மார்த்தது[5] நமனு மார்த்தனன்.

கொண்டுகூட்டு: வல்லவன் அவ் வுரை வழங்குங்காலையில், அமரர் 'அல்லல் நீங்கினம்' என ஆர்த்தனர். எல்லையில் உலகங்கள் எவையும் ஆர்த்தன. நல் அறம் ஆர்த்தது. நமனும் ஆர்த்தனன்.

பொருள்: இலக்குமணன், அந்தச் சபதவாசகத்தைச் சாற்றிய போது, தேவர்கள் 'துன்பம் நீங்கினோம்' என்று ஆரவாரித்தார்கள். அளவற்ற உலகத்தோரனைவரும் ஆரவாரித்தார்கள். தருமதேவதை ஆரவாரித்தது. (அரக்கர் உயிர்களை அருந்தலாமென்று) எமதருமனும் ஆரவாரித்தான்.

வல்லவன், இலக்குமணனைக் குறித்தது. அல்லல் - துன்பம். ஆர்த்தல் - ஒலித்தல். அமரர் - தேவர்.

பாடபேதம்: [1] வல்லையி னிவ்வுரை. [2] எல்வையுள், போழ்தினில், மாலையில். [3] அல்லலை நீங்கிய. [4] உலகமும் எவையும், உலகமும் யாவும். [5] ஆர்த்தன.

உலகமும் எவையும் என்ற பாடத்தில் முன்னைய உம்மை, இசைநிறை. பின்னைய உம்மை, முற்றும்மை. நமனும் என்பதில் உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

## இலக்குமணன் போர்

[ இலக்குமணன் கூறியதைக் கேட்ட இராமன், மகிழ்ந்து, புன் சிரிப்புத் தோன்ற முகமலர்ந்து, 'நீ, யாவராயினும் ஒருவரைச் சங்கரிப்பேனென்று சங்கற்பித்தாயானல், அதற்குரிய உபாயத்தை

அறியும் அறிவுபடைத்துள்ளாய். உன் திறமைக்குமுன், காவற் கடவுளான திருமாலும் சங்காரமூர்த்தியான சிவபிரானும் யாதொரு திறமையும் இல்லாதவராவர். நீ வெற்றியடைவது நிச்சயமானது' என்று கூறினன்.

இலக்குமணன், இராமனை வணங்கி, 'அரக்கர்கூட்டத்தை அவர்கள் தேர்களோடு அதஞ்செய்வேன்' என்று கூறிப் பொருதற்குப் புறப்பட்டான்.

இந்திரசித்தின் தேரிற் கட்டிய சிங்கங்கள் நடுங்க, அங்கதன் சிங்கநாதம்* செய்தான். இராமன், சமுத்திரஓசை பின்னிடச் சங்கநாதஞ்செய்தான். இராக்கதர், மழு, சக்கரம், ஈட்டி, வேல் முதலிய படைக்கலங்களை வீசினர்கள். இலக்குமணன் எய்த அம்புகளால் அரக்கர் ஏவிய ஆயுதங்களனைத்தும் அறுபட்டு வீழ்ந்தன; தேர்கள் அடியிலுள்ள அச்சு இற்றன; தேர்களிற் பூட்டிய குதிரைகள் மடிந்தன; தேர்களைச் செலுத்திய பாகரும் ஏறிச்சென்ற தலைவரும் கொல்லப்பட்டனர்; கொடியும் குடையும் முரசும் சிதைந்தன. அறுபட்ட தந்தையர் தலைகள் மைந்தர்தேர் நடுவிலும், மைந்தர்தலைகள் தந்தையர்தேர்நடுவிலும், மாறிமாறி வந்து வீழ்ந்தன. எல்லாம் சின்னபின்னங்களாய் ஒன்றோடொன்று கலந்துகிடந்ததனால், இது தேர்ப்பகுதி, இது குதிரைப்பகுதி, இது வீரருடற்பகுதி, இது தலைவருடற்பகுதியெனத் தெரியப்படவில்லை.

## ரணகளவருணனை

இரத்தவெள்ளத்திலே அம்பைப்பற்றிய அறுபட்ட கைகள் அலைவது, கடலிலே கொம்புமீன்கள் திரிவதை ஒத்தது. அந்த ரத்தவெள்ளத்தில் படியும் பறவைகள்போல, அறுபட்ட கொடிகளும் குடைகளும் காணப்பட்டன. இரத்தவெள்ளத்தில் முழுகிச் சிவந்து தோன்றிய தேர்கள் (அனுமன் கொளுத்திய) தீப்பற்றியெரியும் இலங்கைமாளிகைகளை ஒத்தன. ]

* சிங்கநாதம் - போரில் வீரர்செய்யும் கர்ச்சனை.

## இந்திரசித்து இராமலக்குமணரை வினவுதல்

134 இருவ[1] ரென்னெடு[2] பொருதிரோ வன்றெனின் ஏற்ற
ஒருவர்[3] வந்துயிர்[4] தருதிரோ வும்படை யோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ வுறுவது புகலும்
தருவ[5] னின்றுமக் கியானெனச் சொல்லினன்[6] சலத்தான்.[7]

கொண்டுகூட்டு: 'சலத்தான், இருவர் என்னொடு பொருதிரோ? அன்றெனின், ஏற்ற ஒருவர் வந்து உயிர் தருதிரோ? உம்படையோடும் பொருது பொன்றுதல் புரிதிரோ? உறுவது புகலும். (அதை) யான் இன்று உமக்குத் தருவன்' என்று சொல்லினன்.

பொருள்: கோபமுடையன் (ஆன இந்திரசித்து, உங்களுயிரை யிழக்க நீங்கள்) இருவரும் என்னோடு பொருவீரோ? அல்லாவிடின், (உங்களில் என்னோடு பொருதற்குச் சிறந்த) தகுதியுடைய ஒருவர் (பொருபவராய்) உயிரைத் தருவீரோ? அல்லாமல் நீங்கள் (சேர்ந்தோ, தனித்தோ என்னொடு பொராமல், இருவரும்) உங்கள் படையோடு கூடிப் பொருது (எல்லாரும்) சாவீர்களோ? (நான் கூறிய மூன்றுவகைப் போர்களில் உங்களுக்குப்) பொருத்தமான தைப் புகலுங்கள். (அதை) நான் இன்று உங்களுக்குத் தருவேன் என்று கூறினன்.

ஏற்ற - தகுதியுடைய. பொன்றுதல் - சாதல். உறுவது - பொருந்துவது (ஆகிய போர்). சலம் - கோபம்.

நான்காம் அடி, திருநெல்வேலிக்கவிராயர்வீட்டு ஏட்டுப்பிரதியிற் கண்டது.

பாடபேதம்: [1] இருவிர். [2] எனனுடன். [3] ஒருவிர். [4] வந்தமர். [5] தருவல். [6] ஏற்றுள தொன்றென, உற்றுள தொன்றென. [7] சமைந்தான், சலித்தான்.

## இலக்குமணன் விடையளித்தல்

[ 'வில் வாள் முதலிய படைக்கலங்களால், உன்னோடு பொருது உன்னைக்கொல்வேனென்று சபதஞ்செய்திருக்கின்றேன் (ஆதலால், நானே உன்னோடு பொருவேன்)' என்று இலக்குமணன் கூறினன்.]

## இந்திரசித்துக் கூறுதல்

135 முன்பி றந்தநின் தமையனை[1] முறைதவிர்த் துளக்குப்
பின்பி றந்தவ னுக்குவன் பின்பிறந் தோயை
முன்பி றந்தவ னுக்குவ னிதுமுடி யேனேல்
என்பி றந்தத னற்பய னிராவணற் கென்றான்.

கொண்டுகூட்டு: 'முறைதவிர்த்து, முன்பிறந்த உன்தமையனை உனக்குப்பின்பு இறந்தவனுக்குவன். பின் பிறந்தோயை முன்பு இறந்தவனுக்குவன். இது முடியேனேல், இராவணற்குப் பிறந்ததனால் பயன் என்?' என்றான்.

பொருள்: '(மூத்தவன் செத்தபின், இளையவன் சாகும் இயற்கை) முறையை (இராமலக்குமணரான உங்கள் திறத்தில்) நீக்கி (உன்னை இப்போது சாகச்செய்து பின்பு, இராமனைச் சாகச்செய்வேனாதலால்) உனக்கு முன்பு பிறந்த உன்தமையனை உனக்குப் பின்பு இறந்தவனுக்குவேன். அவனுக்குப்பின்பு பிறந்த உன்னை அவனுக்குமுன்பு இறந்தவனுக்குவேன். யான், இப்போது கூறியதைச் செய்து முடியேனானால், இராவணனுக்கு மகனாகப் பிறந்ததனால் யாது பயன்?' என்று இந்திரசித்துக் கூறினான்.

தவிர்த்து - நீக்கி. பின் பிறந்தோயை - பின்பு பிறந்த உன்னை.

'நான் இராவணனுக்கு மகனாகப்பிறந்ததற்குப் பயன் அவன் கருத்தை முற்றுவிப்பதேயாதலாலும், அவன் கருத்து ராமலக்குமணரைக் கொல்வதேயாதலாலும், முதலிற் போருக்கு வருகின்ற உன்னை முடித்திட்டுப் பிறகு உன் தமையனையும் முடிப்பேனென்று இந்திரசித்து கூறினனென்க' வை. மு. கோ.

பாடபேதம்: [1] தம்முனை, நும்முனை.

[ '"இலக்குவன்" என்ற பெயர் உனக்கு ஏற்றதேயென்னும்படி, உன்னை என் அம்புகளுக்கு இலக்கு ஆகச்செய்வேன். உனக்கும் என் அம்புகளுக்கும் இடையே வந்து சிவபிரானே விலக்கினாலும் அவன் விலக்குதலை என் வில்லால் விலக்கியிடுவேன். என் அறுபதுவெள்ளம் சேனையை அதஞ்செய்த நீங்கள் இருவரும் இரங்கும்படி உங்கள் எழுபதுவெள்ளம் சேனையும் இருந்த இடம் வெற்றிடமாம்படி இறந்தொழியச்செய்வேன். ]

136 கும்ப கன்னனேன் றிராமனன் றமரிடைக் கோன்ற[1]
தம்பி யல்லனு னிராவணன் மகனொரு[2] தமியேன்
எம்பி மாருக்கு மென்சிறு தந்தைக்கு மிருவிர்[3]
செம்பு ணீர்கோடு[4] கடன்கழிப் பே[5]னெனத்[6] தெரித்தான்[7]

கொண்டுகூட்டு: 'இராமன் அன்று அமரிடைக்கொன்ற கும்பகன்னனென்ற தம்பி அல்லன் நான். (நான்) இராவணன்மகன், ஒருதமியேன். எம்பிமாருக்கும் என்சிறு தந்தைக்கும் இருவிர் செம்புண் நீர்கொடு கடன் கழிப்பேன்' எனத் தெரித்தான்.

பொருள்: 'இராமனாற் போரிலே கொல்லப்பட்ட கும்பகருணனென்ற பேருடைய (இராவணன்) தம்பியல்லன் நான் (உங்களாற் கொல்லப்படுதற்கு). (இராவணன் தம்பியல்லனேல், வேறு, யாவனெனில்,) இராவணன் மகனுவேன். (ஆயின், அவன்மக்கள் அட்சயகுமாரன் அதிகாயனென்பார்போல, நீங்கள் கொல்லக்கூடியவனல்லேன். எவராலும் கொல்லக்கூடாத பிரத்தியேகமும் அபூர்வமுமான) ஒரு (சிறந்த) தனித்தன்மையுடையேன்; (உங்களிருவரையும் கொல்வேன். கொன்று, அட்சயகுமாரன் அதிகாயனென்ற) என் தம்பிமாருக்கும் என் சிறிய தந்தை கும்பகருணனுக்கும் உங்களிருவரின் இரத்தத்தைக்கொண்டு நீர்க்கடன் கழிப்பேன்.' என்று தெரிவித்தான் இந்திரசித்து.

'கும்பகன்னனென்ற, இராமன்......கொன்ற தம்பி' எனற்பாலது, செய்யுளில், 'கும்பகன்னனென் றிராமன்......கொன்ற தம்பி' என வந்தது கவனிக்கத்தக்கது.

அமரிடை - போரில். 'இராவணன்' என்பது முன்வரும் 'தம்பி' பின் வரும் 'மகன்' என்பவற்றோடு இயையநின்றது. ஒரு - ஒப்பற்ற. தமியேன் - தனித்தன்மையுடையேன். எம்பிமார் - என் தம்பிகள். தாதை - தந்தை. செம் புண் நீர் - இரத்தம். தெரித்தான் - தெரியச்செய்தான்.

பாடபேதம்: [1]இராமனன் றம்பிடைக் குரைத்த. [2]அல்லயா னிராவணனொருமகன். [3]இருவர். [4]கொண்டு. [5]கழிப்பான். [6]இன்று, என்று. [7]தீர்ந்தேன், தீர்ந்தான்.

## இலக்குமணன்கூறுதல்

[ 'இராக்கதரென்பாரெல்லாருக்கும் பிரேதகருமஞ்செய்தற்கு விபீடணன் காத்திருக்கின்றான். இறக்கக்கடவனாகவுள்ள உன் தந்தைக்கு நீ செய்தற்குரிய கருமங்களை (அவனுக்குமுன் உன்னை இறக்கச்செய்வேனாதலால்) அவன் உனக்குச் செய்வான்' என்று இலக்குமணன் கூறினான்.

## எதிர்பேசாமல் இந்திரசித்து அம்புகள் எய்தல்

இந்திரசித்து, கொடுங்கோபங்கொண்டு, வானமும் பூமியும் மறையும்படியாக, பெருமழை பொழியும் மேகங்களைக் காட்டிலும் இருமடங்கு மும்மடங்குக்கும் அதிகமாக, அம்புகளை எய்தான்; அங்கதன்மேல் ஆயிரமும், அனுமான்மேல் அதற்கிரட்டியும், மற்றைய வானரத்தலைவர்கள்மேல் கணக்கற்றவையுமாக, அம்புகளை எய்து, எங்கும் அம்புமயமாக்கினான்; இராமலக்குமணர் மேலும், மிக்க வலிமையுடைய பாணங்களைப் பிரயோகித்தான்.

## இந்திரசித்தும் இலக்குமணனும் எதிர்த்துப் போருதல்

இந்திரசித்து எய்த அம்புகளை இலக்குமணன் அத்தொகை கொண்ட அம்புகள் எய்து அவமாக்கினான். பின்பு, அவன் எய்த அம்புகள் இந்திரசித்தின்தேரிற் பூட்டியிருந்த சிங்கங்கள் நூற்றையும் கூற்றுக்கு இரையாக்கின. இந்திரசித்து, அங்கதன்தோளிலும் இலக்குமணன்புயத்திலும் அழுந்தும்படி பிறைச்சந்திரன்வடிவமான கணைகளை மிகுதியாக எய்து, தனது சங்கை யெடுத்து ஊதினான். அவனுடைய கவசம் சிதைந்து கழன்றுவிழும்படி, இலக்குமணன், ஈரைந்து பாணங்களை எய்து, தன் வில்லை நாணெறிந்து (சங் கொலிக்கு) எதிர் ஒலி யெழுப்பினான். இலக்குமணனுக்குப்பின்னே (அவசியமானால் உதவிசெய்தற்குச் சித்தனாய்நின்ற) இராமன், தம்பி போர்த்திறமைகண்டு மகிழ்ந்து, முகத்திற் புன்சிரிப்புப் பொலிய, வானரர்களை (இலக்குமணன் நாணெறிந்த ஓசையோடு பொருந்த) ஆரவாரியுங்கள்' என, அவர்கள் அண்டம் விண்டதென்னும்படி ஆரவாரித்தார்கள். அப்போது, இந்திரசித்து, (இனி, இங்கு நின்றால், அபாயம்விளையுமென்று,) ஆகாயத்திற் போய் ஒளித்தான்.

## இலக்குமணன் பிரமாத்திரம் தொடுக்க முயலலும் இராமன் தடுத்தலும்

இந்திரசித்து மறையவே, இலக்குமணன், இராமனை நோக்கி, 'இவனைப் பிழைக்கவிட்டால், நம் சேனையை அழித்திடுவானாதலால், பிரமாத்திரத்தைப் பிரயோகிப்பேன்' என, இராமன், 'அந்த அத்திரத்தின் உக்கிரம் மூன்றுலகத்தையும் முடித்திடும். அதனைத் தொடுக்காதே' என, இலக்குமணன், அதனைத் தொடுத்தலை நிறுத்தினான்.

## இந்திரசித்து தானே முந்திப் பிரமாத்திரத்தை விடுவதாக எண்ணிச் செல்லல்

இந்திரசித்து, இராமலக்குமணரெண்ணத்தை ஊகித்தறிந்து, தான் பிரமாத்திரத்தை முந்தித் தொடுக்க நிச்சயித்து, இப்போது பிரிந்துபோவதே செய்யத்தக்கதென்று எண்ணி, இலங்கைக்குப் போனான்.

இந்திரசித்தின்கருத்தையறியாது, அவன் தோற்றோடினான் என்று எண்ணித் தேவர்கள் சிரித்தார்கள். வானரத்தலைவர்களும் அவ்வாறே கருதி ஆரவாரஞ்செய்தார்கள். அஞ்சியோடிப்போன வானரங்களெல்லாம், திரும்பிவந்து ஆரவாரஞ்செய்து ஆனந்தக் கூத்தாடின.

## இராமலக்குமணர் போர்க்கோலம் நீக்குதல்

இராமலக்குமணர், அனும அங்கதர் தோள்களினின்று இறங்கி, வில்லையும் அம்புப்புட்டிலையும் மெய்க்கவசத்தையும் கைக்கவசத்தையும் களைந்து, வீற்றிருந்தார்கள். தேவர்கள், மலர்மாரி சொரிந்து, மங்களவாழ்த்து வழங்கினார்கள்.

## சூரியாத்தமனம்

'இந்திரசித்து பிரமாத்திரம்விடுதலைக் காணப் பொறேன், அதற்குமுன் அத்தமிப்பேன்' என்று சூரியன் மறைந்தான்.

## இராமன் விபீடணனைச் சேனைக்கு உணவுகொணர ஏவி, அத்திரபூசைக்குச் செல்லல்

'இரவும் பகலும் பொருது சேனை இளைத்திருக்கின்றது. இன்னும் உணவு வரவில்லை. நீ சென்று கொணரப் போவாயாக,' என்று இராமன் கூற, விபீடணன், உடன்பட்டுத் தன்னவரோடு சென்றான். 'தெய்வப்படைக்கலங்களுக்கு முறைப்படி பூசைபுரியச்

செல்கின்றேன். நான் வரும்வரையும் நீ சேனையைக் காத்துக் கொள்' என்று இலக்குமணனிடம் சொல்லி, இராமன் போர்க் களத்தைவிட்டுப் போனான்.

### எதிரிகள் பிரமாத்திரத்தை யெய்யுமுன் தான் எய்வதாக, இந்திரசித்து இராவணனிடம் கூறல்

இந்திரசித்து, இராவணனிடம்போய், போர்க்களத்தில் நிகழ்ந்த செயல்களைப் புகன்று, எதிரிகள் தன்மேல் பிரமாத்திரந்தொடுக்க எண்ணியதையும் சொன்னான். இராவணன் திகைத்து, 'இனி யாது செய்பத்தக்கதென்பதைச் சொல்' என, இந்திரசித்து, 'தன்னைக் கொல்லத் துணிந்தவர்களை அவர்கள் துணிந்தபடி செய்யுமுன் கொல்லுதல் தருமம் என்பது அறிஞர் கூறும் அறிவுரை. எதிரிகள் பிரமாத்திரம் தொடுக்குமுன் நான் தொடுத்தல் நல்லது. அதுவே செய்யத்தக்கது. அந்த அத்திரத்தை நான் எய்யப்போகிறே னென்று தெரிந்தால், அவர்கள் அதனை முந்தி யெய்து தடுப்பார்கள். என்னைக் கண்டால், கொல்லவும் வல்லவர். அந்த அத்திரத் திற்குரிய வேள்வியைச் செய்துமுடித்து, அவர்கள் வாழ்வை ஒரு கணநேரத்திற்குள் முடிப்பேன். அவர்கள் போரில் மும்முரமாக மூண்டு என்னை மறக்கும்படி, அவர்கள்மேல் அளவிறந்த சேனையை அனுப்புவாயானால், நான் செய்பவேண்டியதை (அவர்களறியாமல் பிரமாத்திரமெய்தலை)ச் செய்வேன்' என்று கூறினான்.

### இராவணன் மகோதரனைப் போர்புரிய ஏவுதல்

எதிரேநின்ற மகோதரனைநோக்கி, இராவணன், 'நீ, நூறு வெள்ளம் சேனையோடு அகம்பன் முதலிய படைத்தலைவர்கள் பக்க பலமாகப்போய், இராமலக்குமணரை எதிர்த்துப் பொருவாயாக. நீ ஒருவனே தனியனாய், மாயவித்தைகளென்பவை யாவை, மற்றைய வித்தைகளென்பவை யாவை, அவைகளெல்லாவற்றையும் உப யோகித்து மிக்க இருளை விளைத்து(த் திகைப்பையுண்டாக்கி) மூன் றுலகத்தோரையும் ஒருசேர வெல்லவல்லாய். அப்படிப்பட்ட நீ, போய், அவர்களுயிரைக் குடித்து எனக்கு உதவுவாயாக' என்று கூறினான்.*

* இந்திரசித்து எதிரிகள் அறியாமல் பிரமாத்திரமெய்து அவர்களைக் கொல்லுதற்கு மகோதரன் உதவுவதைக் கொல்லுவதாகவே கூறியது, உண்மைபற்றியன்று, உபசாரம்பற்றியென்பது.

### மகோதரன் போர்க்குப் புறப்படல்

இராவணன் எப்போது தன்னை ஏவுவான் என்று காத்துநின்ற மகோதரன், ஏவப்பெற்றதனால், இறுமாப்புற்று, தேர்மீது ஏறினன். மலையைச் சூழும் மதயானைகள்போல, அந்தத் தேரை அரக்கர் சூழ்ந்தனர். தேர்ப்படையும் யானைப்படையும் குதிரைப்படையும் ஆட்படையும் அளவின்றி நெருங்கின. மேலே பிடிக்கப்பெற்ற கொடிச்சீலைகள், மேகங்களைக் குலையச்செய்தன. சேனை செல்லுதலால் எழுந்த தூள்கள், பிரமன்கண்களை மறைத்தன. யானைகளின் மதநீர், குதிரைகளின் வாய்நுரையோடுகலந்து, ஆறாக ஓடிக் கடலை அடைந்தது. இலங்கைநகர் தான் உட்கொண்டிருந்த அந்த நூறு வெள்ளம் சேனையை வாயில்வழியாக வெளியேவிட்டது, குறுமுனி, தான்குடித்த கடலை வாயின்வழியாக உமிழ்ந்ததை ஒத்தது; சங்கு முரசு எக்காளம் முதலிய வாத்தியங்களின் ஒலியும் வீரர்கள் சிங்கநாத ஒலியும் வில்நாண் தெறிப்பொலியும் குதிரைக்கனைப் பொலியும் யானைப்பிளிற்றொலியும் தேருருளொலியும் சேர்ந்து திரண்ட பேரொலி, உலகைத் திருமால் உட்கொண்டதுபோலத் தன்னுட்கொண்டது (எங்கும் பரந்து தன்னுள் அடங்கும்படி பரவிப் பொதிந்தது).

### அரக்கப்படையும் குரக்குப்படையும் நெருக்கிப் பொருதல்

இராக்கதசேனை இரணகளம் புகுந்தது. அதனை வானரசேனை எதிர்ந்து நெருங்கியது. வானரர் வீசிய மலைகளாலும் மரங்களாலும் இராக்கதர் இறந்தனர். ஆனை குதிரை தேர்கள் அழிந்தன. இராக்கதர் ஏவிய அம்பு மழு சூலம் முதலிய ஆயுதங்களால், வானரர் மாண்டனர். எங்கும் பிணமலைகளும் இரத்த ஆறுகளும் பெருகியதனால் இருபக்கத்துச் சேனைகளின் இயக்கம், தடைப்பட்டது. (திருமால் இராமனாக அவதரித்தபோது, அவனுக்கு உதவியாகத் தேவர்கள் வானரரானதனால்) போர்க்களத்தில் இறந்த வானரர் தேவராகித் தேவலோகத்தையடைய, அங்கே அவர்களைப் பிரிந்து வருந்தியிருந்த தேவியர், பிரிவுநோய்தீர மருவினார்கள். போர்க்களத்து மாண்ட இராக்கதரும் வீரசுவர்க்கமடைந்து தேவராயினர்.

[தொடரும்]

# ஐயமும் அழகும்.

[பிரபுத்தபாரத ஆசிரியர் ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்.]

காட்சிக்கும் துணிவுக்கும் இடையே ஐயம் நிகழும். காட்சி ஐம்புலவாயிலாக எய்தும் உணர்வு. துணிவு, 'யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும், அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காணும் மெய்யுணர்வு;' ஆதலின், ஐயத்தினீங்கித் தெளிந்தாரான் எய்துதற்குரியது. அளவினால் எல்லைப்பட்ட பொருளினைக் கண்ணுற்றோன், ஒரு நோக்கோடு அமைவான்; நோக்குந்தோறும் நோக்குந்தோறும் புதிய புதிய அழகினைத் தோற்றுவிக்கும் ஒரு பொருள் கண்ணெதிர்ப்படுமாயின், அதனைக் கண்டோன், 'நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி' அப்பொருளின் காட்சிநலனைத் துய்த்தற்கு முயல்வான்; இம்முயற்சியே ஐயவுணர்வினுக்கு அடிப்படையாயிற்று. ஆதலினாலே, ஈண்டு நாம் ஆராயும் காட்சி ஐயம் என்னும் இரண்டினுள்ளும், காட்சியினும் ஐயம் சிறப்புடையதென்று அறிதல்வேண்டும்.

ஐயமானது வியப்பு எனவும் மருட்கையெனவும் தமிழ்நூலார் வகுத்துக்கூறிய அற்புதரசத்தினைச் சார்ந்துவருவது.

"ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப"

என ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே"

எனப் பிற்காலத்தாரும் கூறிய விதி சொல்லிலக்கணத்திற்குப் போலவே பொருளிலக்கணத்திற்கும் பொருந்துவது. அங்ஙனமாதலின் கைக்கிளைத்திணை, ஐந்திணை, பெருந்திணையென ஆன்றோர் வகுத்துக்கூறிய அகத்திணையொழுக்கமானது, ஆடவன்

ஒருவனுக்கும் மடவரல் ஒருத்திக்கும் இடையே நிகழ்ந்த காமக் கூட்டத்தின்வழிப் பிறந்த அன்பு ஒன்றினையே சிறப்பித்துக் கூறுவது என்பதனோடமையாது, ஆங்கு அஃது இன்பப்பகுதியவாய அன்புநெறியனைத்தினுக்கும் பொதுவிலக்கணமாமெனக் கொள்வது பொருத்தமாகும்.

"அன்பினைந்திணை" என ஆலவாயில் அவிர்சடைக்கடவுளும்,

> "இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறினமையின், இன்பப்பகுதி அன்பினொடு ஒன்றி நிற்பது, என அறிந்துகொண்டாம்.

> "எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது
> தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்"

என்றமையின், அறமும் பொருளும் மக்கட்கே சிறப்பாகவுரிய என்பதும், இன்பமோவெனின் மக்களும், தேவரும், நரகரும், மாவும், புள்ளும், மானுமாகிய அனைத்துயிர்க்கும் பொதுவாக அமைந்ததென்பதும் தெளிவாகிறது. ஆதலினாலே, இவ்வுயிரனைத்தும் அன்புசெய்தற்கும் உரியவென அறிதல்வேண்டும்.

நல்லிசைப்புலவர் யாத்தமைத்த கவியிலே ஈடுபட்டு நெஞ்சமுருகி இன்புறுவோன் அக்கவிதையின்பால் அன்புசெலுத்துகிறான். கவிதையை யாத்த புலவன், படிப்போருக்கு இன்பம் பயப்பதுகருதியே யாத்தான். ஆதலின், படிப்போனுக்கும் படிக்கப்படும் கவிதைக்கும் இடையே அமைந்த தொடர்பு பெருந்திணையன்று, கைக்கிளைத்திணையாமென்பது வெளிப்படை.

மலையும், கடலும், கானலும், கழியும், யாறும், பொழிலும், ஊரும், வயலும், செஞ்சுடர்ப் பரிதியும், தண்கதிர் மதியமும், நீலவிசும்பும், விசும்பிலொளிரும் விண்மீனும், மழலைக்குழவியும், இளநகைமாதரும், அருந்திறல் மறவரும், பெருங்கொடை வீரரும் எனநின்ற கவிதைப்பொருள்வயின் இயைந்துநின்று நெஞ்சமுருகும் செஞ்சொற்புலவன், அப்பொருள்வயின் அன்பு செலுத்துகிறான்; அப்பொருட்பகுதியனைத்தும் அழகுடையவாதலின்.

இயற்கை என்னும் பெண்ணணங்கு தலைவியாக, அத்தலைவியினது பேரழகிலே ஈடுபட்ட கவிஞன் காதலனாகின்றான். இயற்கையணங்கும் புனைவன புனைந்தும், பூண்பன பூண்டும் அழகுவிளங்க நிற்பது, தனது காதலனாகிய கவிஞனைக்கருதியேயென அறிதல் வேண்டும். கவியுணர்ச்சியில்லா வேனையமாந்தர் இயற்கையணங்கின் அழகைக் காண்பதுமில்லை; காதலிப்பதுமில்லை. இங்ஙனம் நோக்குமிடத்து, இயற்கைக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு கைக்கிளைத் திணையின்பாற்படுவதென அறிகின்றோம்.

இவ்வாறு பொதுவாய்நிற்கும் இன்பம்பற்றிய அன்பினை நூன்முறையாக வகுத்துக்கூறப்புகுந்த ஆசிரியர் மிக்கதின்மேல் வைத்துக் கூறினாரெனினும்,

"குழவி மருங்கினும் கிழவ தாகும்"

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"

எனக் கைக்கிளைப்புறனாகிய பாடாண்பகுதியினுள்ளே பிறவற்றிற்கும் ஏற்றிக்கூறினார்.

ஐம்புலவுணர்வினைக்கூறும் பொருளியல்நூல்களுக்கு (Sciences) காட்சி கருவியாகும். "நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி" இன்புறுதற்குரிய ஓவியநூல், வட்டிகைச்செய்தி: என்றித் தொடக்கத்தவாகிய அழகுநூல்களுக்கு (Fine-Arts) ஐயம் கருவியாகும். துணிவு, தத்துவஞானம் என வடநூலார்கூறும் மெய்யுணர்வுநூல்களுக்கு (Philosophy) கருவியானது.

ஐயத்தின்வழி அழகுபிறப்பதனை உணர்த்துவதற்கு ஆன்றோர் செய்தளித்த அழகிய செய்யுட்கள் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம். பொழில்விளையாட்டுவிருப்பினாலே ஆயமகளிர் நீங்கத் தமியளாய்நின்றாள் ஒரு தலைமகள். அங்ஙனம், நின்றாளை வேட்டவிருப்பான் இளையார் நீங்கத் தமியனாகிய தலைமகன் ஒருவன் வந்து கண்ணுறுகின்றான். கண்ணுற்றகாலைத் தலைமகளது பெருவனப்புத் தலைமகனது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுகின்றது.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு"

என ஐயுறுகின்ருன். அவளது கண்களின் நோக்கம் இன்பமும் துன்பமும் ஒருங்குநல்கி அளவிடப்படா நீர்மையதாதலின், அது "கூற்றமோ, கண்ணே, பிணையோ" என மீட்டும் ஐயுறுகிருன்.

"பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும்
திங்கண் முகத்திலங்கச் செவ்வாய் எயிறிலங்கக்
கொங்குண் குழல்தாழக் கோட்டெருத்தஞ் செய்தநோக்கு
எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுமே"

விமலையாரதுநோக்குப் பார்த்த இடமெங்கும் தோன்ருநின்றது; ஆதலின் அளவிடற்கரியதென ஐயுற்ற சீவகநம்பி, இன்பினையும் துன்பினையும் ஒருங்களிக்கும் அந்நோக்குப் பலப்பல பொருளுரு வாக வெளிப்படல்கண்டு,

"வாளார் மதிமுகத்த வாளோ வடுப்பிளவோ
தாளார் கழுநீரோ நீலமோ தாமரையோ
நீள்வேலோ அம்போ கயலோ நெடுங்கண்ணே
கோளார்ந்த கூற்றமோ கொல்வான் தொடங்கினவே"

என்கின்ருன்.

"அருணேக்கஞ்செய்தலிற் கண்ணே, கயலோ, வடுப்பிளவோ, கழுநீரோ, நீலமோ, தாமரையோ என்றற்கும் தக்கு, ஒருகாற் பொதுநோக்கமும் செய்து கொல்வான் தொடங்கினவாதலின், கூற்றமோ, வாளோ, வேலோ, அம்போவென்றற்கும் தக்கு இரு பகுதியும் உடையவாயிருந்தன வென்ருன்.'

ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்ளே தான் கண்ட பேரழ குடையாளைப் பன்முறை நோக்கிய காமுகன், "ஈங்கே வருவாள் இவள் யார் கொல்; வல்லவன் தைஇய பாவை கொல்; நல்லார் உறுப்பெல்லாங்கொண்டியற்றியாள்கொல்; வெறுப்பினல் வேண் டுருவங்கொண்டதோர் கூற்றங்கொல்?" என ஐயுறுகின்ருன்.

கங்கை மானிடமடந்தையாகி நிற்க, அவள் பேரெழிலில் ஈடு பட்ட சந்தனு,

"வையகமடந்தைகொல் வரைமடந்தைகொல்
செய்யபங்கயமலர்த்திருமடந்தைகொல்
துய்யவண்கலைவிதச்சொன்மடந்தைகொல்"

என ஐயுறுகின்ருன்.

பதுமையைக் கண்ணுற்ற சீவகநம்பி,

"வரையின்மங்கைகொல் வாங்கிருந் தூங்குநீர்த்
திரையின்செல்விகொல் தேமலர்ப்பாவைகொல்
உரையின்சாயலியக்கிகொல் யார்கொலிவ்
விரைசெய் கோலத்து வெள்வளைத் தோளியே"

என ஐயுறுகின்றான்.

'பதுமை முன்பு கண்டவளாயினும் வேட்கைமிகுதியான் ஐயம் நிகழ்ந்தது' என உரையாசிரியர் கூறிச்செல்கின்றார்.

"மானிளம்பிணையோ, தெய்வவளரிளமுகையோ, வாசத்
தேனிளம்பதமோ, வேலைத்திரையிளம் பவளவல்லிக்
கானிளங்கொடியோ, திங்கட்கதிரிளங்கொழுந்தோ, காமன்
தான்இளம்பருவங்கற்கும் தனிஇளந்தனுவோ என்ன"

"நாடும் இன் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க"

என்னும் சேக்கிழார்சுவாமிகள் திருவாக்கினாலே, அழகு புதிதுபுதிதாக வளர்ந்து போங்குவது என்னும் உண்மை புலப்படுகின்றது. தண் மதியம் என்றும் நிறைமதியாயிருக்குமாயின் ஞாயிற்றினும் குறைந்த ஒளியுடையதென இழித்தொதுக்கப்படும். பிறையாய்த்தோன்றி வளர்தலின் புதுமையின்பாலதாகிய மருட்கைச்சுவையைநல்கி அழகுடைப்பொருளாயிற்று.

"நவிறொறும் நூனயம்போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்னும் குறட்பாவினுள்ளே நாயனார் இன்பந்தரும் நூல்நயத்தினையும் இன்பந்தரும் பண்புடையாளர் தொடர்பினையும் ஒருங்கு வைத்து அழகானது அளத்தற்கரியதாய்த் துய்க்குந்தோறும் துய்க்குந்தோறும் வளர்ந்துதோன்றும் நீர்மையினைக் காட்டினார்.

கற்பியலினுள்ளே தலைவியினது ஊடலானது பின்னர் அவள் பாற் பெறநின்ற நலத்தினுக்குப் புதுமையளிப்பதாதலின், மதியத்தின் தேய்வுபோல அழகு விளங்குவதற்கு அடிப்படையாயிற்று.

பாவையாரின் பேரழகிலே ஈடுபட்ட தம்பிரான்றோழர்,

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து

விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்" என்று வியந்து, மேலும்,

"ஓவியநான் முகனெழுத ஒண்ணுமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனாகி முன்னின்றது" என்கின்றார்.

பரவையாரும், பதியிலார்குலத்துப் பிறந்தவராதலின், உள்ளத்துதித்த வேட்கையானது நாண் மடம் அச்சம் பயிர்ப்பை வலித்தெழ,

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேஎன் மனந்திரித்த இவன்யாரோ"

எனக் 'கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி'யழகில் ஈடுபட்டு மருட்கையெய்துகின்றார்.

அயோத்திநகரென்னும் அணங்கின் பேரழகில் ஈடுபட்ட கவிச்சக்கரவர்த்தி,

"நிலமகன் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ உயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகோ ஊழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்"

என மொழிகின்றார்.

ஆன்றோர் ஐயத்திணையின்பாலுரைத்த செய்யுட்களில் தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, வேற்றுப்பொருள் வைப்பு, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, ஒப்புமைக்கூட்டம்: என்னும் செய்யுளணிகளியைந்து நிற்பதை ஆராய்ந்து காணலாம். ஈண்டு உரைப்பிற் பெருகும்.

# பண்டைக்காலத்து நாகரிகம்

[ ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை அவர்கள், B.A., (LOND.) ]

## பூமி

பண்டைக்காலத்து மக்கள் தம் வாழ்க்கையை எத்தகைய அரங்கில் நடித்தார்கள் என்பதை ஈண்டு ஆராய்வாம். மக்களுடைய நடனசாலையாகிய பூமி 25,000 மைல் சுற்றளவையும் 8000 மைல் விட்டத்தையும் கொண்ட ஒரு உருண்டையாகும். சிலர், இப்பூமி பெரியதெனவும் இப்பூமியைச்சுற்றியே ஞாயிறு திங்கள் என்றற்றொடக்கத்து உருண்டைகள் சுழல்கின்றன எனவும் எண்ணியிருந்தனர். இவ்வெண்ணம் தவறானதெனக் கலைவல்லோர் காட்டுகின்றனர். ஞாயிற்றைச்சுற்றிச் சுழன்று திரியும் உருண்டைகளில் பூமி ஒன்றெனவும் ஞாயிற்றுக்கும் பூமிக்கும் இடையில் பெரிய வெளி உளதெனவும் இடையிலுள்ள தூரம் 90000000 மைல் எனவும் இரண்டுக்கும் இடையில் 11000 பூமிகளை வைக்கலாமெனவும் வானநூலோர் கூறுப. விண்ணில்தோன்றும் விண்மீன்களில் பெரும்பாலன பரிதிகளென்றும் அவை நம் கட்புலனாகும் பரிதியிலும் மிகப் பெரியவை என்றும் வானநூலோர் விளம்புகின்றனர். பூமிக்கும் ஞாயிற்றுக்கும் இடையிலுள்ள தூரத்திலும் பார்க்க 250000 மடங்கு தூரத்திலே நம்முடைய கட்புலனாகும் ஞாயிற்று அண்டத்திற்கு அணித்தாயுள்ள சிரியஸ் என்னும் பரிதி நிலைக்கின்றதென வானநூலோர் சாற்றுகின்றனர்.

இந்தப்பூமி 6000 ஆண்டுகளுக்குமுன்னேதான் தோன்றியதென ஒருசிலர் கூறுப. வானநூலோர் இந்தப் பூமியும் சனி ஞாயிறு செவ்வாய் புதன் வியாழன் சுக்கிரன் என்பவையும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்னரே தோன்றியவை எனக் கணக்கிடுகின்றனர். இந்த ஞாயிற்றின் அண்டமும் அதைச்சேர்ந்த உருண்டைகள்யாவும் 3000000000 ஆண்டுகட்குமுன்னர் ஒரே தீப்பிழம்பாயிருந்தன எனவும் அப்பிழம்பு ஒரு விண்மீனின் கவர்ச்சியால்

பல உருண்டைகளாகப் பிரிந்ததெனவும் அவ்வுருண்டைகள் தீப் பிழம்புகளாகச் சுழன்றன எனவும் செப்புகின்றனர். ஒரு உருண்டை காலக்கிரமத்தில் குளிர்ந்து பூமியாகவும் திங்களாகவும் பரிணமித்தது எனவும் கூறுப. இந்தப் பூமி எத்தனை ஆண்டுகட்கு முன் குளிர்ந்து உயிர்வாழ்தற்குரிய இடமாயிற்றெனச் சொல்ல முடியாது. சிலர் 500 கோடி ஆண்டுகட்குமுன்னர் எனவும் கூறுவர். பனிப்பாறைகள் நிலப்பரப்பை இடையிடையே மூடிவந்தன எனவும் கடைசியாக 50 கோடி வருடங்களுக்குமுன் பூமியின் பெரும் பகுதி பனிப்பாறைகளால் மூடப்பட்டிருந்ததெனவும் கூறுப. பூமி குளிர மட்கண்டம் தோன்றிற்று. அம்மட்கண்டங்கள் புடை பெயரத்தொடங்கி மலைகளாகவும் பள்ளங்களாகவும் அமைந்தன. இம்மாறுதல் நெடுங்காலம் நிகழ்ந்தபின்னர் ஒருவாறு நிலையான மலைகளும் பௌவங்களும் தோன்றின.

### பிராணிகள்

பழையகாலத்து மட்கண்டங்களை ஆராய்வார் அம்மட் கண்டங்களில் உருப்பதித்தும் என்புகளை விட்டும் அழிவெய்திய பிராணிகளை ஆராய்ந்து எத்தகைய பிராணிகள் முதன்முதல் நம் பூமியில் வாழ்ந்திருத்தல்கூடுமென ஆராய்ந்தனர். உயிர்ப்பிராணி கள் கடலில் தோன்றியிருக்கவேண்டுமென மட்கண்டநூலோர் கருதுகின்றனர். ஆதியில் முதுகெலும்பில்லாப் பிராணிகளே தோன்றியிருக்கவேண்டுமெனவும் காலம் செல்லச்செல்ல அவை முதுகெலும்புள்ள மீன்களாக விருத்தியடைந்திருக்கவேண்டுமென வும் ஊகிக்கின்றனர். காலத்திற்கேற்ற கோலம் உடையனவாகவே பிராணிகள் விருத்தியடைதல் இயல்பு. சூடு குளிர் கனம் முதலி யவற்றுக்கேற்ப விருத்தியடையாப் பிராணிகள் அழிவெய்தியிருக் கும். காலத்துக்குக் காலம் பூமி ஞாயிற்றைச்சுற்றிச் சுழலும் காலம் குறுகியேனும் நீண்டேனும் இருக்கலாம். அன்றியும் கடல் தரையாயும் தரை கடலாயும் மாறியிருத்தலும் கூடும். இங்ஙனம் மாறுதலால், கடல்வாழ்பிராணி தரையிலும் தரைவாழ்பிராணி கடலிலும் வாழவேண்டியதாக நேரிடுமாகலின் பிராணிகள் தரையி லும் கடலிலும் வாழக்கூடிய ஆற்றல் உடையனவாக விருத்தி

யடைந்தன. அப்பிராணிகள் நீரிலும் நிலத்திலும் சஞ்சரிக்கக்கூடிய தவளை முதலை முதலியன. தரையில்மாத்திரம் வாழக்கூடிய பிராணிகளாகிய நகரும் பிராணிகள் முட்டையில் தோன்றுவன என வழங்கப்படும். முட்டையிலுள்ள கரு சூரியவெப்பத்தினுல் குஞ்சாகும். பண்டைக்காலத்து நகரும் விலங்குகள் சில இப்போதையவற்றினும் மிகப் பெரியவை என அவற்றின் என்புகளைக் கொண்டு காட்டுகின்றனர். நகரும் விலங்குகள் சில மரங்களில் ஏறிப் பயின்றபின்னர், பறத்தற்குச் சிறகும் பெற்றன. அவற்றுள் சில வெளவால் முதலியவை. நகரும் பிராணிகளிலிருந்தே பறவைகள் தோன்றியிருத்தல்வேண்டும். காலவேற்றுமையால் முற்காலத்துப் பெரிய விலங்குகள் அழிவெய்தியிருத்தல் கூடும். பின்னர் முட்டையில் தோன்றும் விலங்குகளிலிருந்து கருப்பையில் தோன்றும் விலங்குகள் உதித்தன. கருப்பையிற்றோன்றுவன தம் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்ப்பன. கருப்பையிற்றோன்றுவன விருத்தியடைந்து குரங்காகவும், குரக்குமனிதனுகவும், மனிதனுகவும் விருத்தியடைந்தன. ஜாவாவிலும் சீனுவிலும் பிரான்ஸிலும் எடுக்கப்பட்ட உருவமுடைய குரக்குமனிதன் 250,00000 ஆண்டுகளுக்குமுன் இருந்தானும். வாலற்ற குரங்குதான் மனிதனுக விருத்தியடைந்திருத்தல் கூடும்.

## கற்காலமனிதர்

இனிச் சரித்திரகாலத்துக்குமுந்திய மக்களின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்வாம். அக்காலத்து மக்கள் உபயோகித்த கருவிகளாலும் அவர்கள் தீட்டிய படங்களாலும் அவர்கள் எத்தகையோர் என்பதை உணரலாம். கற்காலமக்கள் குரங்குகளினின்றும் வேறல்லர். அவர்களுக்குப் பேசவே தெரியாது. அவர்கள் விலங்குகள்போல் சத்தமிட்டனர். அவர்களுக்கு ஆயுதங்களே இல்லை. அவர்கள் ஆடையற்றவராயும் உணவைச் சமைத்து உண்ணத் தெரியாதவராயும் இருந்தனர். அவர்கள் ஏனைய விலங்குகளிலும் புத்திநுட்பம்வாய்ந்தோராதலின் வாழ்க்கைப்போரில் தப்பினர்.

பின்னர் மக்கள் கூட்டங் கூட்டமாக வாழவும் சொற்களை ஆக்கவும் கல்லாயுதங்கள் செய்யவும் தோலாடை அணியவும் தீயுண்டாக்க வும் தொடங்கினர். தீயின் உபயோகங்களை அறிந்தோர் தீயின் இன்றியமையாமையை உணர்ந்து அதைத் தெய்வமாக வணங்கி னர். அதன்பின் மட்கலம் வனையவும் செங்கல் சுடவும் தொடங்கி னர். கற்காலமக்கள் செய்த ஈட்டிகள் கோடரிகள் முதலிய கல் லாயுதங்கள் அவர்களின் என்புக்கூடுகளோடு சில இடங்களில் பண்டைப் பொருளாராய்ச்சிவல்லோரால் எடுக்கப்பட்டுள்ளன. கற் காலத்தோர் மீன்படுத்தும் வேட்டையாடியும் சீவித்தனர். அவர் கள் பெரும்பாலும் குகைகளிலும் மரங்களிலும் உறங்கினர். பின்பு கற்களை அடுக்கிச் சிறு குகைகளாக்கவும் பயின்றனர். பகைவரி னின்றும் தம்மைக் காத்தற்குச் சிலர் குளங்களில் மரங்களை நாட்டி அவற்றின்மீது சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்தனர். ஆல்பஸ் மலைப்பிரதேசங்களில் இத்தகைய குடிசைகள் காணப்படுகின்றன. இவ்வழக்கம்பற்றியே பாப்புவாதேயத்தோர் இன்றும் உயர்ந்த மரங் களில் குடிசைகள் கட்டுகின்றனர் என்ப. மரங்களை எரித்தும் குடைந்தும் சிறு ஓடங்களும் ஆக்கத்தொடங்கினர். உணவுதேடலி லும் தம்மைக் காத்தலிலும் கற்காலமக்கள் தம் காலத்தைக் கழித் தனர் எனச் சொல்லலாம். சிலர் கல்லில் உருவங்களைக் கீறவும் மட்கலங்களில் உருவங்கள் தீட்டவும் தொடங்கினர். கல்லியா ஸ்பானியா தேசங்களில் உள்ள சில குகைகளில் கற்காலமக்கள் தீட்டிய உருவங்களைக் காணலாம். அவர் தாம் வணங்கிய தெய்வங் களையும் அக்குகைகளில் எழுதினர். நிலம் நீர் தீ வளி வான் ஆகிய பஞ்சபூதங்களின் மிகுதியாலும் குறைவாலும் மக்கள் இடருற்றன ராதலின் கற்காலத்தோர் பஞ்சபூதங்களை வழிபட்டனர். தமது உணவுப்பொருள்களைக் கெடுக்காவண்ணம் நீர் வளி முதலியவற் றைத் தெய்வமெனக் எண்ணித் தொழுதனர். துஷ்டதெய்வங்களுக் குச் சாந்தியாகப் பலியிட்டனர். நரபலியிடுதல் அக்காலத்து மிகச் சாதாரணமான வழக்கம். பேய் பசாசுகளை மந்திரத்தினாற் கட்டி னர். காலம் செல்லச்செல்ல ஆடு மாடு மேய்க்கவும் அவற்றின் பாலை உண்ணவும் தொடங்கினர். பிற்காலத்து மக்கள் செம்புருக்கப் பயின்று செப்பாயுதங்கள் செய்தனர். அக்காலத்திலேதான் நெல்லு

யவை கோதுமை முதலியன பயிரிடவும் பயின்றனர். பயிரிடப் பயின்ருேர் நீலாறு யுயிபிறேற்றிஸ் காவிரி மஞ்சளாறு முதலிய ஆறுகளின் கரைகளிலும் சமபூமிகளிலும் வாழ்ந்தனர். பட்டிமேய்ப்போர் கூடாரங்கள் அடித்துத் தம் பட்டிகளோடு அலைந்து திரிந்தனர்.

## சீர்திருந்தியமக்கள்

எகிப்துதேசம் பாலைநிலமுடையதாதலின் பொருள்கள் அங்கு மழை காற்று முதலியவற்ருல் அழிவெய்தாமல் இருக்கின்றன. எகிப்தில் கிடைக்கும் பொருள்களை ஆராய்ந்து பண்டைமக்கள் எங்ஙனம் வாழ்ந்தனரெனச் சொல்லல் இயலும். இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மக்களின் மட்கலங்கள் கல்லாயுதங்கள் செப்புக்கருவிகள் முதலியவை மட்கண்டங்களிலும் குகைகளிலும் மயானங்களிலும் கிடைக்கின்றன. முற்காலத்தோர் ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட விரும்பினுல் அதன் உருவத்தைக் கீறிக் காட்டினர். அவ்வுருவங்களே உருவெழுத்தாகத் திரிந்தன. எகிப்திய உருவெழுத்துக்களை எகிப்திய பூசாரிகள் கிரியை செய்துழி உபயோகித்தனராம். அவற்றிற்கு இக்காலத்தோரால் ஒருவாறு கருத்துரைக்கப்படுகிறது. பிற்காலத்து எகிப்தியர் பப்பீரஸ் என்னும் புல்லில் எழுதப்பயின்றனர். எகிப்தியருடைய முக்கோணக் கோபுரங்களில் சித்திர-எழுத்துக்களைக் காணலாம். எகிப்தியரும் சுமேரியரும் வானைப் பார்த்து நாள் கிழமை மாசம் எனக் காலத்தை அளவைசெய்ய அறிந்தனர்; திசைகாட்டுங்கருவியை உபயோகிக்கும் முறையை எகிப்துதேசத்தார் சீனரிடமும் தமிழரிடமும் கற்றனர்; வைத்தியநூலையும் கணிதநூலையும் சிற்பநூலையும் தமிழரிடமே கற்றனர்; எகிப்தியர் இறந்தோர் உயிர்பெறுவர் என நம்பினராதலின் இறந்தோரின் உடலைப் பாதுகாத்தனர். எகிப்தியர் பாதுகாத்துவைத்த உடம்புகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அழிவெய்தாமல் இருக்கின்றன. என்ன விநோதம்! முக்கோணக் கோபுரங்களுள் சேமிக்கப்பட்டிருக்கும் உடல்கள் எகிப்திய அரசருடையவை. அவ்வுடம்புகள் ஆராய்ச்சிவல்லோரால் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன. அவ்வுடம்புகள் ஆங்கிலமொழியில் 'மம்மி'கள் எனப்படும். ஓரிடத்தில் பூனையின் மம்மி ஒன்றும் மனித

மம்மியோடு எடுக்கப்பட்டதாம். உடம்புகளை அழியவிடாமல் பாதுகாக்கும்முறையைப் பண்டை எகிப்தியர்மாத்திரமே அறிந்திருந்தனர்.

மேனாட்டுக்கலைஞர் பண்டைய நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் சுமேரியநாகரிகமும் சிறந்தவை எனச் சாற்றுகின்றனர். மேனாட்டார், திராவிடர் சீனர் முதலிய கீழைத்தேயத்தோரின் நாகரிகத்தை ஆராய்ந்து அறிந்திலராகலின் மிகப் பழைய நாகரிகமாகிய தமிழ்நாட்டு நாகருடைய நாகரிகத்தைப்பற்றி ஒன்றும் கூறுகின்றிலர். சீனர் பண்டைக்காலந்தொட்டு இம்மைவாழ்க்கைக்குவேண்டிய வித்தைகளையும் கலைகளையும் பயின்றபோதிலும் திராவிடராகிய தமிழரைப்போல் பதிஞானம் உணர்ந்திலர். சீனர் துரேனியர் திராவிடர் என்போர் அக்கினிப்படையை உபயோகித்தனர். தமிழிலக்கியங்களில் ஆகாயவிமானங்களைப்பற்றிப் பலபடப் புனைந்துரைக்கப்படுகின்றதாகலின், பழைய தமிழ்மக்கள் ஆகாயத்தில் பறக்கத்தெரிந்துகொண்டிருந்தனரெனத் துணியலாம். இக்காலத்தில் மேனாட்டார் கட்டும் பெரிய விமானங்களைப்போல் பண்டு செய்யப்படவில்லை. சிறிய பொறிகளே செய்யப்பட்டன. இனித் தமிழ்முனிவர்கள் பிராணாயாமஞ்செய்யப் பயின்று நீண்டகாலம் வாழும் உபாயத்தை அறிந்திருந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மையே. எந்நோய்களையும் மாற்றும் காயகற்பமுறைகளும் தமிழ்மருத்துவர் பயின்றிருந்தனர் என்ப.

சுமேரியரோ எகிப்தியரோ முதன்முதல் சீர்திருந்தினரெனச் சொல்லமுடியாமல் இருக்கின்றது. யுபிறேற்றிஸ் டைக்கிறிஸ் என்னும் நதிக்கரைகளில் வசித்தவர்களே முதன்முதல் சீர்திருந்திய மக்கள் என மேனாட்டார் கூறுப. சுமேரியர் வதிந்த நாடாகிய பாபிலோனியா மேற்கூறிய இருநதிகளும் பாயும் நாடே. ஆங்குக் கற்கள் இல்லை. ஆகையால் சுட்ட செங்கற்களால் குடிசைகளும் கோயில்களும் கட்டப்பட்டன. சுட்ட செங்கற்களில் சுமேரியர் தம் குறிப்புக்களை எழுதினர். அக்குறிப்புக்களில் காணப்படும்

எழுத்துக்கள், ஆப்புப்போன்ற உருவினவாகலின், ஆப்பெழுத்துக்கள் எனப்படும். சுமேரியர் தம் நீதி முறை வணிகம் கமம் முதலியவற்றைப்பற்றிக் குறித்தனர். சுமேரியர் குதிரையேற்றமும் பயின்றனர் என அவர்களுடைய குறிப்புக்களால் புலப்படுகிறது. அசிரியர் சுமேரியருடைய நாட்டுட்புகுந்து சுமேரியரைத் தொலைத்தனர். பாபிலோனிய இராச்சியத்தைத் தொலைத்த அசிரியர் இருப்புக்கருவிகளையும் ஆயுதங்களையும் உபயோகித்தனர். சுமேரியர் தலைநகராகிய பாபிலோனில் சுவர்களில் சித்திரங்கள் எழுதப்பட்டன. சுமேரியர் திராவிடரிடம் எழுதப்பயின்றனர் எனத் துணியப்படுகிறது. சுமேரியர் நாணயம் அச்சிடுமுன் சினர் பெரிய அரசுநடாத்திப் பொன்னுணயம் உபயோகித்தனர் எனக் கூறுப.

சாலடியர் அசிரியரைத் துரத்திச் சுமேரியரோடு கலந்திருந்தனர். சாலடியர் யூதரை அடிமைகளாக்கினர் எனவும் சாலடியர் வலிகுன்ற, யூதர் சுவாதீனமெய்தினர் எனவும் கூறுவர். சுமேரியர் அசிரியர் சாலடியர் எகிப்தியர் என்போர் யாவரையும் அட்டுத் தொலைத்தோர் யாவரெனின், "இற்றையிற்றர்" என்னும் சாதியினரே. அவர்கள் பாபிலோன் நாட்டிற்கு வடக்கிலுள்ள மலைகளில் வசித்த ஒரு கூட்டத்தினராவர். இற்றையிற்றர் போர்த்தொழிலிலும் சிற்பத்திலும் சிறந்துவிளங்கினர். கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் அவர்கள் சுமேரியரையும் எகிப்தியரையும் வென்று அரசுபுரிந்தனர். இற்றையிற்றர் வலிகுன்ற, கிறீற்றுத்தீவாரும் பினீசியரும் யவனரும் பாரசியரும் தலையெடுத்தனர். இவர்களெல்லாரையும் உரோமர் வென்றனர். உரோமர் பிரித்தானியாவைப் பிடித்தகாலத்தில் பிரித்தானியர் செப்புக்காலத்தவர்போலவே வாழ்ந்தனர்.

## தமிழர் நாகரிகம்

ஞாலம் பல ஊழிகளுக்குமுன் தோன்றியதெனத் தமிழ்நூல்கள் கூறுகின்றன. ஞாலத்தின் படைப்பைப்பற்றிப் பரிபாடல் ஒன்று,

"கருவளர் வானத்து இசையிற் றோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீ டாகிய விருநிலத் தூழியும்"

என்று கூறுகிறது.

இங்ஙனம் ஊழிதோறும் நிலைதிரிந்துவந்த நம் உலகில் மக்கள் தோன்றிய இடம் யாதாயிருக்குமோ என ஆராய்வாம்.

மேனாட்டுக் கலைவல்லுநரான 'கைக்கல்' என்பவர், இலமூரியா என்னும் ஒரு நிலப்பரப்பு தமிழ்நாடுதொட்டுக் கீழ்பால் சாவகம் சுமத்திராவரையும் மேல்பால் மடகாஸ்கர்வரையும் பரந்துகிடந்ததெனவும் அஃதே பூமியின் மிகப்பழைய நிலப்பரப்பெனவும் அதன் கண் தோன்றின மக்களே உலகெங்கும் பரவினரெனவும் கூறுகின்றார். இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்த 'ஸ்கொற்றெலியற்' என்பவர் தென்னிந்தியாவிற்குக் கீழ்பால் இருந்த நிலப்பரப்பின் தெற்கே ஒரு மலை இருந்ததென்றனர். தென்னிந்தியாவுக்குத் தெற்கே கிடந்த நிலம் கடல்கொள்ளப்பட்டதெனத் தமிழ் இலக்கியங்கள் கூறுநிற்கும். இழந்த இலமூரியாவின் ஒருபகுதிதான் குமரிக்கண்டம். இலமூரியா அழிந்தபின்னும் அதன்பகுதி இருந்தது. அப்பகுதியில்தான் அழிந்த தமிழ்நாடு நாற்பத்தொன்பதும் பஃறுளியாறும் குமரியாறும் மகேந்திரமலையும் மதுரைநகரும் இருந்தன. தமிழ்நாடும் தமிழ்மொழியும் மிகப் பழையவை என்பது புறப்பொருள்வெண்பாமாலையில் உள்ள உதாரணச்செய்யுள் ஒன்றால் வலியுறுத்தப்படுகிறது. அது,

"பொய் யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி"

என்பதாம்.

இந்துக்கள் அண்டங்களின் இயல்பை நன்குணர்ந்து அவற்றினைத் தம் தத்துவநூல்களில் கூறினர். சிவதருமோத்தரம் அண்டங்களின் இயல்பைக் கூறுகின்றது. பூவுலகு ஏழு பெருந்தீவும் ஏழு பெருங்கடலும் உடையதாயிருந்ததாம். ஏழு பெருந்தீவுகளுள் நடுவணது நாவலந்தீவு. அந்நாவலந்தீவின் ஒருபகுதியே குமரிக்கண்டம். சிவஞானமுனிவர் தம் மாபாடியத்தின்கண் அண்டங்களின் இயல்பை ஆராய்வான்தொடங்கி இந்துக்களின் அளவைக் கணக்கை இனிது விளக்கினர். அது வருமாறு:—

"சாளரத்திற்றோன்றும் ஞாயிற்றின் கதிரின் அதிநுட்பமாய்த் தோன்றும் நுண்ணிய துகள் அணு எனப்படும். அது எண்மடங்கு கொண்டது திரிசரவணு. அஃதெண்மடங்குகொண்டது கசாக்கிரம். அது எண்மடங்குகொண்டது யூகை. அது எண்மடங்கு கொண்டது யவை. யவைநெல்லகலம் எட்டுக்கொண்டது ஒரு அங்குலம். அங்குலம் இருபத்துநான்குகொண்டது ஒரு முழம். முழம் நான்குகொண்டது ஒரு வில். வில் இரண்டுகொண்டது ஒரு தண்டம். தண்டம் இரண்டாயிரம்கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்குகொண்டது ஒரு யோசனை." இவ்வளவையை இந்துக்கள் பண்டுதொட்டு உபயோகித்தனர். விண்மீன்களை முதன்முதல் அளந்தறிந்தோர் இந்துக்களே. கலைகளையும் வித்தைகளையும் மாசற உணர்ந்து ஒழுக்கத்தால் மேம்பட்டோர் தமிழரே என்று இறுமாப்பெய்துவோமாக.

குமரிகண்டத்திலே வாழ்ந்த பழந்தமிழ்க்குடிகளே முதன்முதல் சீர்திருந்தி நாகரிகநிலையடைந்து வாழ்ந்த மக்களென அறிஞர் கூறுப. இக்கூற்று இக்காலத்தில் ஆராய்ச்சிவல்லோரின் துணிவுகளாலும் வலியுறுத்தப்படுகிறது. மோகஞ்சதாரோ அரப்பா என்னும் நகரங்களைத் தோண்டியறிந்தோர் அந்நகரங்களில் வாழ்ந்தோருடைய கலன்களையும், சித்திரங்களையும், சிலைகளையும் பார்த்து அந்நகரத்தோர் மிக நாகரிகமடைந்த சாதியினரெனவும் அவர் இலிங்கவழிபாடுசெய்தவரெனவும் அவர்கள் ஆரியரல்லர் திராவிடராதல் கூடுமெனவும் சுமேரிய பாபிலோனியருக்கு முன்னரே சீர்திருந்தினரெனவும் துணிகின்றனர். பண்டைக்காலத்துத்,

தமிழர் யாவருக்கும்முன் எழுதவும், கணக்கிடவும், கமஞ்செய்யவும், வணிகஞ்செய்யவும், நூல்நூற்கவும், கப்பல்கள்கட்டவும் அறிந்திருந்தனர் என்பதற்கு ஐயமில்லை. தமிழருடைய பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் கிறீஸ்துவுக்குப் பலநூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது. தமிழ்மொழியுண்டாகி, இலக்கணம் தோற்றுதற்குமுன் சீர்திருந்தியமொழியாகப் பேசப்பட்டிருக்க வேண்டும். கி. மு. 5000 ஆண்டுகளுக்குமுன்னமே தமிழர் தத்துவ ஞானம் உணர்ந்து சிவனை வழிபட்டனராயின், அவர்தம் நாகரிகத்தின்சிறப்பை எடுத்துரைத்தல் மிகையாகும். தமிழ்மொழியும் தமிழ்நாகரிகமும் மிகச்சிறந்தவையாதலாற்றான் ஏனைய பண்டையமொழிகளும் நாகரிகங்களும் இறந்து ஒழிந்தபோதிலும் தமிழ்மொழியும் தமிழருடைய நாகரிகமும் இறவாது இருக்கின்றன. தமிழ்நாட்டில் பாழாயிருக்கும் பண்டைநகரங்களைத் தோண்டிப்பார்த்தால் இவ்வுண்மைகள் எல்லாம் வலியுறும்.

## சுமேரியர் (பாபிலோனியர்)

தமிழர் சீர்திருந்தியிருந்தகாலத்தே யுபிறேற்றிஸ் டைக்கிறிஸ் என்னும் நதிக்கரைகளில் வதிந்த மக்களும் நாகரிகமடைந்தோராய் வாழ்ந்தனர். அம்மக்களே சுமேரியர் எனப்படுவர். சுமேரியருடைய தலைநகர் பாபிலோன் ஆகலின், சுமேரியர் பாபிலோனியர் எனப்பட்டனர். சுமேரியர் தம் குறிப்புக்களை மண்ணேடுகளில் எழுதினர். கற்கள் கிடையாமையால் சுமேரியர் செங்கல்சுடப் பயின்றனர். பண்டைப்பொருளாய்வோர் மண்ணேடுகளை எடுத்து, சுமேரிய மொழிகளுக்குக் கருத்துரைக்கப் பயின்றதன்பயனாக, சுமேரிய நாகரிகத்தின் வரலாறு இக்காலத்தோருக்குத் தெரியவருகிறது. கி. மு. 4000 ஆண்டுகட்குமுன்னரே சுமேரியர் கடிதமுறையை ஊரெங்கும் ஏற்படுத்தி உபயோகித்தனர் எனவும், நீர்பாய்ச்சலை நூன்முறையாகச் செய்தனரெனவும் கூறுப. சுமேரியருடைய துறைமுகம் 'எரிது' எனவும், கமத்தொழிற்களம் 'நிப்பூர்' எனவும் தெரிகிறது. சுமேரியர் பண்டுதொட்டு ஆதித்தனையே வழிபட்டனர். செமிற்றிக் குழுவினராகிய அக்காடியர் சுமேரியரோடு கலந்தனர். அக்கலப்பைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. சுமேரியர்

சிலகாலம் அசிரியாவையும் சிரியாவையும் ஆண்டனர். கி. மு. 3000 அளவில் கிழெல்லையில் வதிந்த ஈழநாட்டோரும், மேலெல்லையில் உறைந்த அமோறியரும் சுமேரியநாட்டைச் சூறையாடிக் கெடுத்தனர். வேந்தன் 'ஹமுரபி' ஈழநாட்டோரைத் துறத்திச் சுமேரியரின் சுவாதீனத்தைக் காத்தான். அவன் எழுதிய கடிதங்களும் விதித்த பிரமாணங்களும் கிடைக்கின்றன. அவனுடைய ஆட்சிக்காலத்தில் வானநூல்களும் வைத்தியநூல்களும் இலக்கணங்களும் நிகண்டுகளும் இயற்றப்பட்டன. சுமேரியப்பெண்கள் சுவாதீனமுடையராய் வாழ்ந்தனர். 'இற்றையிற்றர்' ஹமுரபியின் சந்ததியாரோடு பொருதனர். பின்பு சாலடியர் சுமேரியரைவென்று 576 ஆண்டுகள் அரசாண்டனர்.

## அசிரியர்

அசிரியர் பாபிலோனுக்கு வடபால் வதிந்தனர். அவருடைய நாகரிகம் பாபிலோனியருடைய நாகரிகத்தின்வழித்தோன்றியதென்பர். அவர்கள் வாணிகத்தையும் போர்த்தொழிலையும் பெரிதும் போற்றினர். அசிரியர் கி. மு. 1000-ல் தம் ஆட்சியைப் பாபிலோனியாவிலும் சிரியாவிலும் நாட்டினர்.

ஷல்மனேசர் முதன்முறையும் இரண்டாமுறையும் நடாத்திய போர்கள் அசிரியருடைய தலைநகராகிய 'நினேவா' நகரிலுள்ள சுவர்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது ஷல்மனேசருடைய மகன் அசூர்தனபால் கலகம் விளைத்தானாக, மற்றொரு மகன் நாலாம் ஷாம்ஷி இராமன் கலகக்காரரை அடக்கினன். அவன் ஆர்மீனியரோடு பொருதான். கி. மு. 745-ல் அசிரியருடைய இராச்சியம் தழைத்தோங்கியது. புலி என்னும் ஒரு படைத்தலைவன் அரசியலைச் சீர்திருத்தி ஆர்மீனியரை அடக்கியதுமன்றி இற்றையிற்றியரிடமும் பினீசியரிடமும் திறைபெற்றான். அவன் இறக்க வேறொரு படைத்தலைவன் கி. மு. 727-ல் அரசபதவியைப்பெற்றான். அவன் பெயர் சார்கன். கி. மு. 705-ல் அவனுடைய மகன் சாமனேசர் (சென்னசரிப்) சாலடிய பாபிலோனியரோடும் யூதரோடும் சிடன் நகரத்துப் பினீசியரோடும் போர்நடாத்தினன். அவன் பாபிலோன்

நகரைப் பாழாக்கியபின் எகிப்தையும் பிடித்து 22 மாகாணமாகப் பிரித்துத் தேசாதிபதிகளை நியமித்தனன். அவனுடைய மக்கள் இருவர் அவனை கி. மு. 681-ல் கொன்றனர். அசிரியர் பின்னரும் எகிப்தியரோடு பொருது தீபுநகரை அழித்தனர்.

சாலடியர் (பாபிலோனியர்)

கி.மு. 606-ல் சாலடியர் தலையெடுத்து அசிரியரைப் பாபிலோனிலிருந்தும் துரத்திச் சுவாதீனமாயிருந்தனர். கி. மு. 605-ல் 'நபுகத்நாச்சர்' என்னும் சாலடியவேந்தன் சிரியாவை ஆண்டிருந்த 'நெக்கோ' என்னும் எகிப்திய தேசாதிபதியை வென்றான். நபுகத்நாசருக்குப்பின் செங்கோல்செலுத்தியவன் 'நபடோனியஸ்' என்பான். அவன் சுமேரியக்கல்வியை வளர்த்தான். சுமேரிய பாபிலோனியமொழி பண்டைக்காலத்து அரசியற் பொதுமொழியாகவும், வணிகருடைய பொதுமொழியாகவும் திகழ்ந்ததென்ப. பெல்ஷசார் அரசாண்டகாலை சாலடிய பாபிலோனியர் ஒழுக்கங் குன்றிக் கெட்டனரெனக் கூறுப. கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் பார்சியர் ஈழத்தில் குடியேறினர். இரண்டாம் சைரஸ் என்பவன் மீடியரை அட்டுச் சிரியாவினுள் நுழைந்தனன். கி. மு. 538-ல் சைரஸ் சாலடியரைச் செற்றுப் பாபிலோனியதேசத்தையும் கைப்பற்றினான். சைரஸ் என்பவனுடைய மகன் முதலாவது கம்பீசிஸ் எகிப்தையும் தன் ஆட்சிநாடாக்கினான். பின்பு முதலாவதுடேறியஸ் கி. மு. 521-ல் அரசுகட்டிலேறிச் சின்னாசியாவைப் பிடித்துப் பார்சிய ஆழிவேந்தனாகி, யவனரோடு பொருதான்.

[தொடரும்]

உ

# பரிசோதனத்தொடர்

செந்தமிழிலே பத்திராசிரியர்களாலும் பிறராலும் பரிசோதனத்தொடர் என்ற தலைப்பின்கீழ் முன் வெளியிடப்பெற்ற பலவிடயங்கள் தமிழ்கற்போர்க்கும் மிகவும் பயன்படத்தக்கனவாயிருந்தன. மேலும் அது தொடர்ந்து வெளிவரின், பல அரியநூல்களிலுள்ள தமிழ்ச்செய்யுட்களின் உண்மையுருவம் புலனாவதுடன் பொருட்டெளிவுபிறத்தற்கும் ஏதுவாகும். புதியநூல் வெளியீடுகளைப்போலவே பழைய வெளியீடுகளிலுள்ள திருத்தங்களும் பிறவும் வெளிவருவதும் தமிழ்வளர்ச்சிக்கும் தமிழ்மாணவர் அறிவு வளர்ச்சிக்கும் உற்றதுணையாய் அமையும்.

அம்முறையில், சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித்தமிழ் வித்துவான்பரீக்ஷைக்குப்பயிலும் மாணவனாகிய யான், அப்பரீக்ஷைக்குரிய பாடநூல்கள் சிலவற்றுள் கண்ட திருத்தங்களை அப்பரீக்ஷைக்குப்பயிலும் மாணவர்க்கு உபயோகமாகும் என்னுங் கருத்தினால் இங்கு வெளியிடத்துணிகிறேன். அதிற் காணும் பிழைகளைப் பொறுத்தருளுமாறு அறிஞர்களை அடிபணிந்து வேண்டுகிறேன்.

வித்துவான் பரீக்ஷாபாடங்களுள் திருவாரூர்க்கோவை என்பதும் ஒன்று. திருவாரூர், சோழநாட்டுச் சிவதலங்களுட்சிறந்தது. சோழர்கள் முடிபுனைதற்குரிய ராஜதானிநகரமாய் விளங்கியது. இதன்பெருமை விரிக்கிற் பெருகும். கோவையென்பது அகப்பொருட்கிளவிகளை முறைப்படத்தொகுத்துரைப்பதொரு பிரபந்தமாகும். திருவாரூர்க்கோவை. திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசப்பெருமானைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு எழுந்தது; தமிழ்த்துறைபோகிய பெரியாராகிய சைவ எல்லப்பநாவலரால் இயற்றப்பட்டதாக வழங்கப்பெறுவது; பலவகை நலனும் ஒருங்கியைந்து நிலவுவது. சென்னைத்திருவாளர் ஆ. மே. சென்னகேசவலுநாயுடவர்களால் பதிப்பிக்கப்பட்ட இவ்வரியநூலின்

அச்சுப்பிரதியொன்று எனக்குக் கிடைத்தது. அதுகொண்டு அந் நூலினைப் படித்துவருங்கால் யான்கண்ட திருத்தங்கள் வருமாறு:-

1. 4, 5, 8, 17 முதலிய பல பாடல்களில் வேற்றுமைச்சந்தியால் ஆரூர்த்தியாகர் என்று தகரவொற்றிரட்டுமாறு பதிக்கப்படவேண்டிய தொடர், 'ஆரூர் தியாகர்' என்று தகரவொற்றிரட்டாது, பிழைபடப் பதிக்கப்பட்டுளது. அவ்வாறு வருமிடமெல்லாம் 'ஆரூர்த்தியாகர்' எனத் தகரவொற்றிரட்டுமாறு திருத்திக்கொள்ளல் தகும்.

2. 6-ஆம் பாடலின் 2, 3 அடிகளில் 'கண்வேலை யென்மார்பகத்தே விட்டுப் பரர்முகமாகநின்றீர்' என்று காணப்படுகிறது. இதனுள் பரர்முகமாக என்பது பராமுகமாக என்றிருக்கவேண்டும். பராமுகம் - அசட்டை.

3. 7-ஆம் பாடலின் முதலடி 'கொந்தேறு கொன்றையாரூர்த்தியாகர் குளிர்சிலம்பின்' என்றுள்ளது. இது, கட்டளைக்கலித்துறையடிக்குரிய எழுத்துக்குறைந்து பிழைபடுதலின், அப்பிழை நேராதவாறு, 'கொந்தேறு கொன்றையராரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்' என்று திருத்திக்கொள்ளுதல் அமைவுடையதாம்.

4. 10-ஆம் பாடலின் 3-ஆம் அடியில் 'இளைக்கின்ற திங்கட்கவர்ந்தேகுதல்கண்டு' என்று இருப்பதை 'இளைக்கின்ற திங்கள் கவர்ந்தேகுதல்கண்டு' என்று திருத்திக்கொள்ளல் தகும்; திங்கள் + கவர்ந்தேகுதல் என்பது எழுவாய்த்தொடராகலின்.

5. 17-ஆம் பாடலின் முதலிரண்டடிகளில், 'கனலாறு தனக்கு வெண்ணெ யாலஞ்சமைத்தபடியொக்குமே' என்றிருப்பது, 'கனலாறு தனக்குவெண்ணெய் பாலஞ் சமைத்த படியொக்குமே' என்றிருக்கவேண்டும். 'நெருப்பாற்றுக்கு (நெருப்பாறு கடத்தற்கு) வெண்ணெய்ப்பாலம் கட்டியவாறுபோலும்' என்பது இதன் பொருள். 'வெண்ணெயாலஞ்சமைத்தபடி' என்பது பொருட்பொருத்தமின்றி நிற்றல் காண்க.

[தொடரும்.]

ஒரு மாணவன்.